செந்தமிழ்ச் செல்வி

உள்ளுறை

	பக்கம்
'மனோன்மணீய'த் தமிழ்த் தாய் வணக்கமும் திராவிட மொழிகள் பிரிந்த வரலாறும்'	௪௭௭
உயிர் மெய்ம் முதல் வேர்ச் சொற்கள்	௪௮௫
வங்கா	௪௯௩
இறைவிப் பித்தன் காவியம் அல்லது அபிராமி பட்டர் புராணம்	௪௯௭
மொழியியல் ஆராய்ச்சிக் கட்டுரை (ஒன்பது)	௫௦௧
தண்டபாணி அடிகள்...பாராட்டும் திருப்புகழ் முனிவர்	௫௦௭
மழை வேண்டல் பதிகம்	௫௧௨
மா இறைவன் மாண்பு அலவோ?	௫௧௫
மறைமலையடிகள் நூல் நிலைய வளர்ச்சிக்குப் ......பரிந்துரைத்தல்	௫௧௬
வறட்சி நிலை	௫௧௯
டாக்டர் கலைஞரின் 52 ஆவது பிறந்த நாள் விழா	௫௨௦
மொழி இயல் கோடைப் பயிற்சி நிலையம்	௫௨௧
செய்திகளும் குறிப்புகளும்	௫௨௨

சிலம்பு-௪௯.] வள்ளுவர் ஆண்டு ௨௦௦௬, வைகாசி (June'75) [பரல்-௧௦

'செந்தமிழ்ச் செல்வி'

இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

க. டாக்டர் ந. சஞ்சீவி, எம். ஏ., பி.எச்டி.
தமிழ்த்துறைத்தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம்.

உ. 'சித்தாந்த கலாநிதி', உரைவேந்தர்,
ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள், மதுரை.

ங. திரு. கொண்டல், சு. மகாதேவன் அவர்கள், எம். ஏ., பி. எஸ்ஸி.
இயக்குநர், தமிழகவரசு தமிழ் வளர்ச்சித்துறை.

ச. செஞ்சொற்கொண்டல், வித்துவான்,
டாக்டர் சொ. சிங்காரவேலன், எம்.ஏ., டிப். லிங்.
அ. வ. அ. கல்லூரி, மாயூரம்.

ரு. செந்தமிழ்க் கலைமணி, வித்துவான்,
பண்டித, கா. பொ. இரத்தினம் அவர்கள்,
பி.ஏ. (ஆனர்சு), (லண்டன்) எம்.ஏ., பி.ஓ.எல். (சென்னை)
கொழும்பு.

சா. புலவர் இரா. இளங்குமரன்,
திருநகர், மதுரை-6.

எ. திரு. இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி.லிப்.
நூலகர், மறைமலையடிகள் நூல்நிலையம், சென்னை.

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு	திருவள்ளுவர் ஆண்டு உ௦௦சு, வைகாசி	பரல்
சக	சூன் 1975	க௦

'மனோன்மணிய'த் தமிழ்த்தாய் வணக்கமும் திராவிட மொழிகள் பிரிந்த வரலாறும்

பாடல்கள் வருமாறு :

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திரவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே.

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாஉன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே.

தமிழ்நாடு அரசு இவ்விரண்டு பாடல்களில் சில வரிகளை நீக்கித் தமக்கு வேண்டியவாறு 'தமிழ்த் தெய்வ வணக்கப் பாடலாக அமைத்துக் கொண்டது'. பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் மொழி வரலாற்றுண்மையினைத் தாம் பாடிய பாடல்களில் அமைத்துள்ளனர். ஆனால் தமிழ்நாடு அரசு மேலே குறிப்பிட்ட இரண்டு பாடல்களில் முதல் பாடலை அப்படியே வைத்துக் கொண்டு அதனுடன் இரண்டாவது பாடலிலுள்ள கடைசி இரண்டு வரிகளில் "உன், சீரிளமைத் திறம் வியந்து

செயல் மறந்து வாழ்த்துதுமே!'' என்ற சொற்களை மட்டும் இணைத்துக் கொண்டது. அதனால் வரலாற்றுண்மை தமிழ் மக்களிடையே மறக்கப்படுகிறது.

தாய் மொழியாம் தமிழ்மொழி ஆரியத்தாலும் ஆரியராலும் ஒன்று பலவாகப் பிரிக்கப்பட்டதென்பது உண்மைக்குப் புறம் பாகாது. தந்தை பெரியார் 'தாம் தொடங்கிய கழகத்துக்குத் 'திராவிடர் கழகம்' என்றும், பேரறிஞர் அண்ணா அவர்கள் அதனின்றும் பிரிந்து தாம் அமைத்த கழகத்துக்குத் ''திராவிடர் முன்னேற்றக் கழகம்' என்றும் பெயர் சூட்டினர்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் இந்தியப் பொரு ளியற்றுறையில் முன்பு பேராசிரியராக விருந்த ஆங்கில அறிஞர் பெருமகனார் கில்பர்ட் சிலேட்டர் எம். ஏ., டி. எஸ். தாம் ஆங்கிலத்தில் ''Dravidian Element in Indian culture'' என்ற நூலை ஆய்ந்து எழுதி 1924 இல் வெளியிட்டனர். அந்த நூலை எழுதுமுன் இந்தியா வெங்கணும் சென்று அறிஞர் பெருமக்கள் பலரோடு கலந்து பேசியும் பல நூல்களைப் பயின்றும் இந்திய நாகரிகத்தில் ''திராவிடப் பண்பு'' ஊடுருவி நிற்றலை நன்கறிந்த பின்னரே மேற்கண்ட தலைப்பில் நூலொன்று எழுதினர். அந்த அருமை வாய்ந்த வரலாற்றுண்மை பொதிந்த நூலைப் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் ''இந்திய நாகரிகத்தில் திராவிடப் பண்பு'' என்ற தலைப்பில் மொழி பெயர்த் தெழுதிய நூல் 1955இல் கழகவழி வெளியிடப் பெற்றுள்ளது.

கன்னடம், தெலுங்கு, துளு, மலையாளம் ஆகிய மொழிகள் நான்கிலுமுள்ள சொற்களில் தமிழ் வேர் இருப்பதை அறியும் பொருட்டுச் சென்னைப் பல்கலைக் கழகம் 1959 ஆம் ஆண்டில் ''Dravidian comparative vocabulary'' (திராவிடர் ஒப்பியல் சொற்கோவை) என்ற நூலின் முதல் தொகுதியை வெளியிட்டுள்ளது. சொல்லின் செல்வர் டாக்டர் சேதுப்பிள்ளை யவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராக விருந்தபோது தெலுங்குப் பேராசிரியர் திரு என். வேங்கடராவ் அவர்கள், கன்னடப் பேராசிரியர் திரு எம். மாரியப்பா பட் அவர்கள், மலையாளப் பேராசிரியர் திரு எஸ். கே. நாயர் அவர்கள் ஆகிய மூவரோடும் அமர்ந்து 'திராவிடர் ஒப்பியல் சொற்கோவை' என்னும் நூலைத் தொகுத்தனர். அதன்கண் Heavenly Bodies (வானின் கோள்கள்) என்பதை முதல் தலைப் பாகவும் culture (பண்பு) என்பதை 22 ஆவது தலைப்பாகவும் அமைத்து மொத்தம் 22 தலைப்புகளில் 2000 ஆங்கிலச்

சொற்களை மட்டும் முதல் வரிசையிலும் அடுத்த வரிசையில் அவற்றிற்கு நேரான தமிழ்ச் சொற்களையும், அதற்கடுத்த வரிசையில் நேரான தெலுங்குச் சொற்களையும், அதற்கடுத்த வரிசையில் நேரான கன்னடச் சொற்களையும் அதற்கடுத்த வரிசையில் கன்னடத்தோடு நெருங்கிய தொடர்புடைய துளு மொழிச் சொற்களையும் அவ்வம் மொழிகட்குரிய வரிவடிவத்தில் அமைத்துள்ளனர். ஒவ்வொரு மொழிச் சொல்லுக்குமுரிய ஒலிப்பினை அதன்கீழ் ஆங்கில எழுத்தில் கொடுத்திருக்கின்றனர். அப்போதைய பல்கலைக் கழகத் துணைவேந்தர் மதிப்புமிகு ஆ. இலக்குமணசாமி முதலியாரவர்கள் அந் நூலுக்கு எழுதிய முகவுரையில் இதைப்போல் இன்னுஞ் சில தொகுதிகள் வெளி யிடப்பெறும் என்று கூறியுள்ளனர். ஆனால் அவர்கள் கூறிய படி அதனை அடுத்து ஒரு தொகுதி கூட வெளிவரவில்லை என்பது வருந்துதற்குரியது. பல்கலைக்கழகத்தினர் அதனைத் தொடர்ந்து செய்து முடிப்பார்களானால் திராவிட மொழிகளின் ஒப்புமைக்கும் திராவிட மக்களின் ஒற்றுமைக்கும் செய்யுஞ் சீரிய தொண் டாகும்.

இந்த முதல் தொகுதியைக் கொண்டுவருவதற்கே ஏறக் குறைய 12 ஆண்டுகட்கு மேலாயிற்று. நான்கு மொழிப் பேராசிரியர்களும் ஒன்று கூடுவதற்கு வாய்ப்புள சில நாள் களிலே ஒரு சில மணி நேரம் கிடைக்குமாம். சொற்கோவை தொகுப்பதற்கென ஒரு நிலையான குழு அமைக்கப் பெற்றிருப் பின் இவ்வொப்பியல் மொழிச் சொற்கோவை ஒருவாறு முற்றுப் பெற்றிருக்கும். அதனால் 12 தொகுதிகள் வரை வெளி வந்திருத்தல்கூடும். மேலும் அம்மொழிகள் பேசப்படும் நாடு களைச் சார்ந்திருக்கும் அண்டை நாடுகளிலும் தாழ்த்தப்பட்ட மக்களிடத்திலும் கைவினைஞர்களிடத்திலும் மற்றும் பல துறைகளிலுள்ளவர்களிடத்திலும் வழங்கப்பெறுஞ் சொற்களை யுந் திரட்டினால் ஒவ்வொரு மொழியிலும் புதிய பல சொற்கள் கிடைத்திருக்கும். அம்மொழி பேசும் மக்கள் தொழிலின் பொருட்டுத் தொகுதியாகத் தங்கியிருக்கும் வெளி மாநிலங் களிலும் வெளிநாடுகளிலும் பேசிவருஞ் சொற்களையுந் தொகுப் பின் பல புதுச் சொற்கள் கிடைக்கப்பெறும் என்று நம்பலாம். அதனாற்றான் மொழித்துறைக்கு நிலையான குழு ஒன்று பல்கலைக் கழகத்திலே இருப்பது நன்று. அதற்குத் தமிழகவரசு வேண்டும் பொருளுதவி செய்து வருதலும் வேண்டும்.

திராவிட மொழிகள் நான்கின் தாய் மொழியாய் விளங்கு வது தமிழ் மொழி என்று தாம் ஆராய்ந்து கண்ட கருத்துக் களைக் கொண்டு மொழிப் பேரறிஞர் ஞா. தேவநேயப்பாவாணர்

அவர்கள் 1944இல் 'திரவிடத் தாய்' என்ற நூலை எழுதிக் கழகப் பதிப்பாக வெளியிடும்படி கொடுத்தார்கள். அதன் இரண்டாம் பதிப்பு 1956இல் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் அரிய பல உண்மைகளைத் தெள்ளத் தெளிய விளக்குவதாகும்.

திராவிட மொழிகளில் தமிழினின்றும் முதன் முதல் கன்னடம் 7ஆவது நூற்றாண்டிலும், தெலுங்கு 9ஆவது நூற்றாண்டிலும், மலையாளம் 13ஆவது நூற்றாண்டிலும் பிரிந்து போயின என்று கூறலாம்.

தாய் மொழியாந் தமிழிலேதான் 2500 ஆண்டுகட்கு முற்பட்ட தொல்காப்பியம் என்னும் பழந்தமிழ் இலக்கணங்களும் அதற்கு முன்னும் பின்னுமுள்ள சிற்சில இலக்கிய நூல்களும் உள்ளன. அவற்றிற்கு மணிமகுடம் போன்றது திருவள்ளுவர் அருளிய திருக்குறள் ஆகும்.

சென்னை வேப்பேரியில் 1779இல் அச்சிடப் பெற்ற தமிழ் ஆங்கில அகர முதலி நூலின் முகப்பில் "A Malabar and English Dictionary wherein words and phrases of the Tamilian Language commonly called by Europeans the Malabar Language" என்றே காணப்படுகிறது. அதனை அடுத்து 1786 இல் ஆங்கிலம் தமிழ் அகர முதலி வெளியிடப் பெற்றுள்ளது. அதன் முகப்பில் (A Dictionary In English and Malabar Languages) என்பது அச்சிடப் பெற்றுள்ளது. இவ்விரு அகர முதலிகளிலும் தமிழ்மொழி (Malabar Language) என்றே கூறப்பட்டுள்ளது. இவற்றிலிருந்து மலையாள மொழி அண்மைக் காலத்திலேதான் தனி மொழியாகப் பிரிக்கப் பட்டுள்ளது என்பது நன்கு தெளிவுறுகின்றது. மேலும் மலையாளத்திலுள்ள பழைய ஆவணங்களும், கல்வெட்டுக்களும் தமிழிலேயே உள்ளனவாம்.

மேலும் என் பெருமதிப்புக்கும் பேரன்புக்குமுரிய சர். ஆர். கே. சண்முகஞ் செட்டியார் அவர்கள் கொச்சி திவானாக இருந்தபொழுது சென்னைக்கு வந்திருந்தார்கள். அப்போது அவர்களை எழும்பூரிலுள்ள திவான் மாளிகையிற் கண்டுபேசும்போது கொச்சி அரசு மாளிகையில் அரசு குடும்பத்தின் பணியாளர்கள் பேசுவதெல்லாம் தமிழ்ச் சொற்களாகவுள்ளன என்று அங்கே பேசப்படுவனவற்றைப் பேசிக்காட்டினர். அதேபோல் திருவாங்கூர் அரசு மாளிகையில் பேசப்படுவதும் தமிழாகவேயுள்ளது என்றும் சொன்னார்கள்.

ஆங்கில ஆட்சிக் காலத்தில் இந்நான்கு மொழியாளரும் ஒரே ஆட்சியின்கீழ் இருந்தமையும், பார்ப்பனரல்லாதார் கட்சி

(நீதிக்கட்சி) (Justice Party) தோன்றியமையும் 50 ஆண்டு களுக்குள் நிகழ்ந்தனவே. 1916இல் தென்னிந்திய நல உரிமைச் சங்கம் துவக்கப் பெற்ற பொழுது ஆங்கிலத்தில் (Justice) (ஜஸ்டிஸ்) என்ற நாளிதழும், தமிழில் 'திராவிடன்' என்ற நாளிதழும் வெளியிடப்பெற்றன என்பதும் யாவரும் மறந்திருக்கமுடியாது.

1956இல் மொழிவாரி மாநிலப் பிரிவினை ஏற்பட்ட பொழுதுதான் சென்னை இராச்சியம், ஆந்திர இராச்சியம், கருநாடக இராச்சியம், கேரள இராச்சியம் என்ற பெயரில் நான்கு தனித்தனி இராச்சியங்கள் ஏற்பட்டன. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சென்னை இராச்சியத்துக்குத் 'தமிழ்நாடு' எனப் பெயர் அமைத்தனர். இப்போது ஆந்திரர் களும் ஆந்திர இராச்சியத்துக்குத் 'தெலுங்கு நாடு' என்ற பெயர் வைத்தல் வேண்டுமென்று சொல்லுகின்றனர். இப் போது தெலுங்கு நாட்டுத் திருக்கோயில்களில் சமற்கிருதத்தில் செய்யப்படும் அர்ச்சனை தங்கட்குப் புரிவதில்லை. எனவே தெலுங்கில் செய்தல் வேண்டுமென்று கூறுகின்றனர். ஆனால் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் தமிழிலேயன்றோ இருக்கிறது என்றும் அதனை எங்ஙனம் தெலுங்கில் மொழி பெயர்ப்பது என்றும் பேசப்பட்டன.

கிறித்தவ சமயத்தைப் பரப்பவந்த கால்டுவெல் பாதிரியார் திராவிட மொழிகளையும் சமற்கிருதத்தையும் நன்கு பயின்று திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண நூல் (A Comparative Grammar of the Dravidian Languages) என்ற நூலை 1856இல் வெளியிட்டனர். அதன் இரண்டாம் பதிப்பு 1875இலும் மூன்றும் பதிப்பு 1913இலும் வெளியிடப்பெற்றுள்ளன. அதன் முன்னுரையினை மட்டும் பேராசிரியர் கா. அப்பாத்துரை எம்.ஏ., எல்.டி., காழி. சிவ. கண்ணுசாமி பிள்ளை பி.ஏ. ஆகி யோர் இருவரும் சேர்ந்து மொழி பெயர்த்தனர். அது கழக வழி வெளியிடப்பெற்றது. எஞ்சிய பகுதி மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன் எம். ஏ., அவர்களால் மொழி பெயர்க்கப் பெற்றுள்ளது.

Dravidic Studies (திராவிட மொழி ஆய்வியல்) என்ற தலைப்பில் 3 பகுதிகள் சென்னைப் பல்கலைக் கழகத்தினரால் 1919ஆம் ஆண்டில் அச்சிட்டு வெளியிடப் பெற்றன. முதற் பகுதி சி.பி. வெங்கடராம ஐயர் எம்.ஏ., எல்.டி. அவர்களாலும், இரண்டாம் பகுதி திரு கே.வி. சுப்பையர் எம்.ஏ.,எல்.டி. அவர் களாலும், மூன்றும் பகுதி எஸ். அனவரத விநாயகம் பிள்ளை,

எம்.ஏ.,எல்.டி. அவர்களாலும் எழுதப் பெற்றன. மூன்ரும் பகுதியில் திராவிட மொழிச் சொற்கோவையில் வடமொழிக் கலப்பு ஏற்பட்டுள்ள குறிப்புகள் விளக்கப் பெற்றுள்ளன.

அமெரிக்கா கலிபோர்னியா பல்கலைக் கழகத்தின் சமற் கிருதப் பேராசிரியர் எம். பி. எமனோ அவர்கள் 1967இல் திராவிட மொழிகளிலுள்ள மக்கள் மரபு நூற் கதைகள் மொழி யியல், பண்பாட்டுச் சார்பான மனித இனநூல் (Dravidian Linguistics, and Folktales, Ethnology) ஆகியவை பற்றி அறிஞர்கள் எழுதிய 33 ஆய்வுரைகளைத் தொகுத்து ஒரு நூலாக 1967இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பதிப்பாக வெளி யிட்டுள்ளார்.

திராவிட ஒப்பியல் வேர்ச்சொல் அகர முதலி (A Dravidian Etymologilcal Dictionary) என்ற தலைப்பில் பேராசிரியர் எம்.பி. எமனோ அவர்களும், ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத் தின் சமற்கிருதப் பேராசிரியர் தி. பரோ (T. Burrow) அவர் களும் சேர்ந்து ஆய்ந்து தொகுத்து எழுதிய நூலொன்று 1961இல் ஆக்சுபோர்டு கிளாரண்டன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளது.

1940க்கு முன் தவத்திரு விபுலானந்த அடிகள் சென்னை, பவழக்காரத் தெரு ஏ. ஆர். சி. உயர்நிலைப் பள்ளியில் தமிழ் மொழியின் தொன்மையினைப் பற்றிப் பேசியபோது தமிழ் மக்கள் நிலநடுக்கோட்டுப் பக்கமுள்ள நாடுகளிலேதான் முதன் முதல் தோன்றி வடநாடுகட்கெல்லாம் சென்று வந்தன ரென்றும் மத்திய தரைக் கடலோரமுள்ள நாடுகளில் வழங்கப் பெறும் மொழிகளில் காணப்பெறும் சில தமிழ்ச் சொற்களைக் குறிப்பிட்டுப் பேசினர்கள். அப்போது நாடாப் பதிவுப் பொறி (Tape recorder) இன்மையால் அதனைப் பதிவு செய்து வைப்ப தற்குரிய வாய்ப்பில்லாது போயிற்று.

கழகத்தின் வழி ஆங்கிலத் திங்கள் இதழ் ஒன்று வெளி யிடுதல் வேண்டுமென்று 30-10-1937 இல் நெல்லையில் நடை பெற்ற செயற்கூட்டத்தில் கருதி அவ்விதழுக்கு (Dravidian Antiquary) 'திராவிடத் தொல்பொருள் ஆராய்ச்சி' என்னும் பெயர் இருத்தல் வேண்டுமென்று தீர்மானஞ் செய்யப் பட்டது. பின்பு 10-2-1938 இல் அவ்விதழுக்குத் 'திராவிடர் பண்பு' (Dravidian Culture) என்று பெயரமைத்து வெளியிட வேண்டுமென்றும் அறிஞர்கட்கு எழுதிக் கட்டுரைகள் பெறுதல் வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றன.

பம்பாயிலிருந்து புனிதத் தந்தை ஈராசு (Father Heras S. J.) அவர்களிடமிருந்து கட்டுரையும் பட அச்சுக் கட்டைகளும் வந்தன. வேறு அறிஞர் சிலரும் கட்டுரைகள் அனுப்பி வைத்தார்கள். கழகத் தலைவர் அட்வகேட் உயர்திரு பி. சிதம்பரம் பிள்ளை இப்போது ஆங்கில இதழைத் தொடங்கி நடத்துவதற் குரிய வாய்ப்பு மிகவும் குறைவு என்றும், அதனைத் தொடங் கினால் இடையில் நிறுத்தாமல் நடத்துதல் வேண்டுமெனவும் சொல்லவே வரப்பெற்ற கட்டுரைகள் திருப்பி அனுப்பிவைக்கப் பெற்றன.

சிந்துவெளி நாகரிகத்தைப் பற்றி அகழ்வாராய்ச்சி செய்த புனிதத்தந்தை ஈராசு அவர்கள் அங்கே கிடைக்கப்பெற்ற பொருள்களைக் கொண்டு முதற்கண் 'திராவிட நாகரிகம்' என்றும் பின்னர் திராவிடர்கட்கு முற்பட்ட இனத்தவர் நாகரிக மாக இருக்குமென்றும் கூறினர். ஆனால் பின்லாந்து அறிஞர் ஆஸ்கோ பார்பொலோ (Asko Parpolo) வும் அவர் உடன் பிறந்தார் சீனோ பார்பொலோ (Sino Parpolo) வும் சிந்துவெளி நாகரிகம் முழுவதும் 'திராவிடர் நாகரிகமே' என்று அறுதி யிட்டுக் கூறினர். நிற்க.

அண்மையிற் காலஞ்சென்ற கணியர் தமிழாசிரியர், சென்னை மாகாணத் தமிழ்ச் சங்க அமைச்சர் இ மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் ஒருமுறை என்னிடம் கூறியதை இங்கே எழுதுவது பொருத்தமாகும். ஒருமுறை திராவிடமொழிப் பண்டிதர் மாநாட்டுக்கு ஏற்பாடு செய்திருந்தார்களாம். ஆனால் அவர்கள் ஒருவர்க்கொருவர் பேசுவதைப் புரிந்து கொள்ள முடியாதென்று கருதவே அடியிற் கண்டபடி முடிவு செய்து பின் மாநாட்டை நடத்தினர்களாம்.

சமற்கிருதம் கலந்த சொற்களை நீக்கித் தூய தெலுங்கு மொழியிலும் பழங் கன்னடத்திலும், தூய மலையாளத்திலும் பேசுதல் வேண்டுமென்று தீர்மானித்துப் பேசி ஒருவர்க் கொருவர் அளவளாவி மாநாட்டை வெற்றியுடன் நடத்தினர் களாம்.

யான் கேட்டறிந்த மற்றொரு செய்தியினை இங்கே கூறுவது மிகவும் பொருத்தமாகும்.

ஐந்தாண்டுகட்கு முன் கதைச் சொற்பொழிவு செய்து வந்த பிராமணர் ஒருவர் கழகத்திலே சில நூல்களை வாங்குவதற்கு வந்தனர். அவரிடம் பேசுதற்கு வாய்ப்புங்

கிடைத்தது. "ஐயா, என்ன பணி செய்து வருகின்றீர்கள் ?" என்று கேட்டேன். அதற்கு அவர் "யான் திராவிட நாடுகள் நான்கிலும் கதைச் சொற்பொழிவு செய்து பிழைத்து வருகிறேன்" என்றனர். "எப்படி ஐயா" என்று வினவினேன். அதற்கு அவர் "2 மாத காலம் ஆந்திர நாட்டிலே தங்கிப் பேச்சுத் தெலுங்கையும், அவ்வாறே கன்னட நாட்டிலே தங்கிப் பேசுங் கன்னடத்தையும், அங்ஙனமே கேரள நாட்டிலே தங்கிப் பேசும் மலையாளத்தையும் கற்றுக்கொண்டேன். ஒரே கதையைத் தமிழ்நாட்டிலும், ஆந்திர நாட்டிலும், கன்னட நாட்டிலும், மலையாள நாட்டிலும் இசையமைத்து அவ்வந் நாட்டு மக்கள் மகிழும் வண்ணம் கதைச் சொற்பொழிவாற்றிப் பிழைத்து வருகிறேன்" என்று சொல்லி வியப்பையும் மகிழ்வையும் விளைவித்தனர். இப்படிச் செய்து பிழைக்கலாம் என்று நமக்கு நன்கு விளங்குகிற தல்லவா? திராவிட மொழிகளிலிருந்து சமற்கிருதத்தை நீக்கினல் தமிழ் அடிப்படை புலப்படும் என்பது இவற்ருல் நன்கு தெரிகிறது.

தமிழ்நாட்டில் மறைத்திரு மறைமலையடிகளின் தனித் தமிழ்க் கொள்கையைக் கடைப்பிடித்துத் தமிழாசிரியர்களில் ஒருசிலரே தமிழ்த் தொண்டு புரிகின்றனர்.

தமிழ் ஒன்றுதான் பழந்தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கொண்டு தனது தூய்மையைக் காத்து வருகின்றது. அதனைச் சீர்குலைக்க ஓரினத்தார் மறைமுகமாகவும் இதழ்கள் வாயிலாகவும் முயன்று வருதலை அறியாதிருப்பதற்கில்லை. யான் மொழி ஆராய்ச்சி செய்தவனல்லன். ஆனல் மொழி ஆராய்ச்சி செய் பவர்களெல்லாம் திராவிட மொழிகளையே பெரும்பான்மை எடுத்துக் கொள்வதைப் பார்க்கிறேன். எனவே அதற்கான காரணங்கள் அறிஞர்கட்குத் தெரியின் சுருக்க விளக்கமாகக் கட்டுரை ஒன்று எழுதியனுப்புவார்களானல் அதனை நன்றி யறிதலுடன் செந்தமிழ்ச் செல்வியில் வெளியிடுவேன்.

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு, என்னும் ஐந்து நாட்டு மக்களும் வரலாற்று அடிப்படையில் ஓரினத்தவர் ஆவர். அவர்களுக்குள் ஒற்றுமை ஏற்படுமானல் தென்னடு, உணவு, நீர்வளம், மின்சாரம், தொழில்துறை, வாணிகம் முதலிய எல்லாவகையாலும் மேன்மையுற்றுச் சிறப்புறும். மக்கள் நல்வாழ்வு வாழ்வார்கள் என்று நம்புகிறேன்.

வ. சு.

———

உயிர்மெய்ம் முதல் வேர்ச்சொற்கள்

[ஞா. தேவநேயன்]

புல்[6]—துளைத்தற் கருத்து வேர்ச்சொல் (தொடர்ச்சி)

பொள்—பொய். பொய்தல்=(செ. கு. வி.) 1. துளைக்கப் படுதல். ''பொய்தக டொன்று பொருந்தி'' (கம்பரா. பஞ்ச. 49). 2. பிடுங்கப் படுதல். ''பொய்த குத்தின......புண்'' (கம்பரா. கிங்கர. 50).

(செ. குன்ரு. வி.) 3. வீழ்த்துதல். ''அவை பார்சோரப் பொய்தான்'' (கம்பரா. அட்ச. 33).

வீழ்த்துதலாவது பள்ளமான அல்லது கீழ் மட்டமான இடத்தை அடையச் செய்தல்.

பொய்—பொய்கை=1. ஏரி அல்லது குளம். ''பொய்கை வாயிற் புனல் பொரு புதவின்'' (பதிற்றுப். 27). 2. இயற்கை யான ஏரி. ''வாவியும் பொய்கையுங் கண்டீர்'' (சீவக. 337).

பொய்=1. உட்டுளை. ''பொய் பொரு முடங்குகை'' (சிலப். 15 : 20). 2. மரப்பொந்து. (பிங்.). 3. உள்ளீடில் லாதது. 4. உண்மையல்லாதது. ''பொருள் கெடுத்துப் பொய்மேற் கொளீஇ'' (குறள். 938). 5. போலியானது. (W.). 6. நிலையாமை. ''புற்புதமே' யன்ன பொய்க்குடி வாழ்க்கையை'' (திருநூற். 3). 7. மாயை. (W.). ம. பொய்.

பொய்த்தல்=1. (செ. குன்ரு. வி.) உண்மையல்லாததைச் சொல்லுதல். ''தன்னெஞ் சறிவது பொய்யற்க'' (குறள். 293). 2. ஏமாற்றுதல், வஞ்சித்தல். ''நின்ருேடிப் பொய்த் தல்'' (நாலடி. 111). (செ. கு. வி.) 1. செயல் தவறுதல். ''விண்ணின்று பொய்ப்பின்'' (குறள். 13). 2. கெடுதல். ''பொருளென்னும் பொய்யா விளக்கம்'' (குறள். 753).

பொய்—பொய்தல்=1. மணற் சிற்றில். ''பொய்தலணி வண்டிமிர் மணற்கோடு'' (பரிபா. 20 : 23). 2. மகளிர் விளையாட்டு. ''பொய்த லாயமொடு'' (சிலப். 6 : 151).

பொய்....பொய்ச்சு=பழத்தின் குற்றம். (W.), சொத்தைப் பகுதி.

பொய்ச்சு — பொய்ச்சா. பொய்ச்சாத்தல் = மறத்தல். (W.).

பொய்ச்சா—பொச்சா. பொச்சாத்தல்=1. மறத்தல். ''புல்லவையுட் பொச்சாந்துஞ் சொல்லற்க''. (குறள். 719).

2. இகழ்தல். "கொடையளிக்கட் பொச்சாவார்" (ஆசாரக். 67).

பொச்சாப்பு=1. மறதி. "பொச்சாப்புக் கொல்லும் புகழை" (குறள். 532). 2. மனவுறுதியின்மை. "வன்சொல் பொச்சாப்பு" (தொல். பொ. 274). 3. குற்றம். (பிங்.). 4. பொல்லாங்கு. (W.).

ஒன்றை மறந்தமனம் ஓரளவு உள்ளீடற்ற கூடு போலிருத்தலால், மறதி பொய்ச்சாப் பெனப்பட்டது.

பொய்—(பய்)—பை. ஒ. நோ: வள்=கூர்மை. வள்—(வய்)—வை=கூர்மை.

பை=துணி, தோல் முதலியவற்ருலான உள்ளீடற்ற உறை.

"தோற்பையுள் நின்று தொழிலறச் செய்தூட்டும்
கூத்தன் புறப்பட்டக் கால்." (நாலடி. 36).

பய்—பயம்பு=1. பள்ளம் (திவா). 2. குழி. "கரந்து பாம்பொடுங்கும் பயம்பு" (மலைபடு. 199). 3. யானைபடு குழி. "பயம்பில் வீழ் யானை" (சிலப். 25 : 31). 4. நீர்நிலை. (பிங்).

பய்—பயல்=பள்ளம். (பிங்).

பொள்—பொளு. பொளு பொளுவெனல்=ஓட்டை வழி ஒழுகுதற் குறிப்பு.

பொளு—பொழு—போழ்.

போழ்தல்=(செ. கு. வி.) 1. பிளவுபடுதல். "புலம்புங் கனகுரற் போழ்வாய வன்றிலும்" (திவ். இயற். திருவிருத். 87). 2. பிரிவு படுதல். (W.). (செ. குன்ரு. வி.) 1. பிளத்தல். "கல்லுடை நெடுநெறி போழ்ந்து சுரனறுப்ப" (பதிற்றுப். 19 : 2). 2. ஊடுருவிச் செல்லுதல். "கடற்குட்டம் போழ்வர் கலவர்" (நான்மணி. 18). 3. அழித்தல். "நீடிருள் போழு நிலைமைத்து" (சீவக. 2118).

க. போழ். போழ்=1. பிளவு. "போழ்படக் கிடந்த" (கல்லா. முருகக். 26). 2. துண்டம். "பசுங்காய்ப் போழொடு" (பெரும்பாண். 307). 3. பிளந்தறுத்த தோல்வார். "போழ் தூண் டூசி" (புறம். 82 : 4). 4. தகடு. "வெள்ளிப் போழ் விலங்கவைத்தனைய" (சீவக. 70).

போழ் முகம்=பிளந்தாற் போன்ற முகத்தை அல்லது வாயையுடைய பன்றி. (பிங்.).

போழ்வாய்=1. பிளந்த வாய். "போழ்வாய வன்றிலும்." 2. பொக்கை வாய். (யாழ்ப்.) க. பொடுவாய் (b). "போழ் வாய்ச்சி கண்டுடம்பு பூரித்தாள்" (விறலிவிடு. 195.)

போழ்—போழம்=பொய், வஞ்சனை, மாறுபடுஞ் சொல். "போழம் பலபேசி" (தேவா. 1080 : 11).

போழப் பெட்டி=1. அகன்ற வாயுள்ள வண்ணப் பனையோலைக் கூடை. 2. மணமகள் வீட்டிற்கு வரிசை கொண்டு போகும் சாயவட்டி.

பொழு—பொழுது=இருளைத் துணிக்கும் கதிரவன்.

ஒ. நோ: "தாழிருள் துமிய மின்னி" (குறுந். 270).

பொழுது புறப்பட, பொழுது சாய, பொழுது வணங்கி (சூரிய காந்தி) முதலிய வழக்குகளால், பொழுது என்னும் சொல் முதலாவது கதிரவனைக் குறித்ததென்பது பெறப்படும்.

பொழுது=1. கதிரவன். "பொழுது போய்ப் பட்ட பின்றை" (சீவக. 1747). 2. காலம்.

> "முதல்எனப் படுவது நிலம்பொழு திரண்டின்
> இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே."
> (தொல். அகத். 4).

3. நாள். "விருந்தும் மருந்தும் மூன்று பொழுது" (பழ.). 4. வாழ்நாள். "பொழு தளந்தறியும் பொய்யா.... காண்கையர்" (முல்லைப். 55). 5. சிறுபொழுது.

> "மாலையோ அல்லை மணந்தார் உயிருண்ணும்
> வேலை நீ வாழி பொழுது." (குறள். 1231).

6. பெரும் பொழுது. "எந்நில மருங்கிற் பூவும் புள்ளும் அந் நிலம் பொழுதொடு வாரா வாயினும்" (தொல். அகத். 19). 7. நேரம். "நிற்பரவு பூசையினும் பொழுது போக்கெனக் கருள் புரிவாய்" (சிவப். பிரபந். சோண. 29). 8. வேளை. கலந்த பொழுதுங் காட்சியும் அன்ன" (தொல். அகத். 16). 9. அமையம். நான் நிலையத்தை அடைந்த பொழுது வண்டி வரவில்லை. (உ. வ.). 10. நொடி. "ஒரு பொழுதும் வாழ்வ தறியார்" (குறள். 337). 11. தடவை. முப்பொழுது மருந்து. (உ. வ.). 12. தக்க சமையம் அல்லது காலம். "இகல் வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழுது" (குறள். 481.) "பொழுதொடு புணர்தல்" (பிங்.). 13. பகல் அல்லது இரவு. ஒரு பொழுது வேலை, ஒரு பொழுது உறக்கம்.

ம. பொழுது, ப. க. போழ்து, து. பொர்து. தெ. ப்ரொத்து (dd).

பொழுது—போழ்து=1. வேளை. "அழல்மண்டு போழ்தின்" (நாலடி. 202). 2. முழுத்தம் (முகூர்த்தம்). "இப்போழ்து போழ்தென் றதுவாய்ப்பக் கூறிய" (கலித். 93).

போழ்து—போது=1. கதிரவன். "போதுஞ் சென்றது குடபால்" (கம்பரா. வனம்புகு. 19). 2. வேளை அல்லது அமையம். "ஆட்கொண்ட போதே கொண்டிலையோ" (திருவாச. 33 : 7).

போழ்து—போழ்தம்=வேளை.

பொள்—பொய். பொய்தல்=வீழ்த்துதல். "அவை பார் சோரப் பொய்தான்" (கம்பரா. அட்ச. 33).

வீழ்தல் என்னும் தன் வினைச்சொல், மழை பெய்தலையுங் குறிக்கும்.

எ - டு :

"விசும்பிற் றுளிவீழி னல்லால்" (குறள். *16*).
"வீழ்க தண்பெயல்" (தேவா.)

பொய்—பெய். பெய்தல்=1. துளைவழி நீர் ஒழுகுதல் போல முகிலினின்று மழை விழுதல். "பெய்யெனப் பெய்யும் மழை" (குறள். 55). ஒ. நோ: "வானின் றமையா தொழுக்கு" (குறள். 20). 2. சிறுநீர் ஒழுக விடுதல். மோத்திரம் பெய்தான். (உ. வ.). 3. வார்த்தல். "பாணர் மண்டை நிறையப் பெய்ம்மார்" (புறம். 115). நெய் பெய்த சோறு. (உ. வ.). 4. கலத்தில் இடுதல். "உலைப் பெய் தடுவது போலுந் துயர்" (நாலடி. 114). 5. கீழிடுதல், "பார்த் துழிப் பெய்யிலென்" (நாலடி. 26). 6. இடைச் செருகுதல். இடையிடையே சில சொற்களைப் பெய்து. (உ. வ.). 7. ஈதல். "உயிர்க்கு.......வீடு பேருக்கம் பெய்தானை" (தேவா. 975 : 7). 8. அமைத்தல். "பிரான் பெய்த காவு கண்டீர்......மூவுலகே" (திவ். திருவாய். 6 : 3 : 5). 9. இட்டுப் பரப்புதல். "தரு மணல் தாழப் பெய்து" (கலித். 114). 10. நீர்க்குள் இடுதல். "கரும்தலை யடுக்கலி னணைகள்...பெருங் கடலிடைப் பெய்து" (கம்பரா. கும்ப. 248). 11. அணிதல். "மைந்தர் தண்டார் மகளிர் பெய்யவும்" (பரிபா. 20 : 21). 12. செறித்தல். "பெய்ம்மணி யேய தேர்" (கம்பரா. நாகபாச. 128). 13. கட்டுதல். "புணர் நார்ப் பெய்த புனைவின் கண்ணி" (பெரும்

பாண். 218). 14. கையாளுந் திறம். ''பெய்திற னெல்லாம் பெய்து பேசினேன்'' (கம்பரா. கும்ப. 169).

ம. பெய்யுக.

பெய்—பெயர்=1. இடுங்குறிச் சொல். பெயரிடுதல் என்னும் வழக்கை நோக்குக. ''மறவர் பெயரும் பீடும் எழுதி'' (அகம். 67). 2. புகழ். ''பெரும் பெயர் மீளி'' (கலித். 17). 3. ஆள் எத்தனை பெயர் இங்கு வேலை செய்கிறார்கள்? (உ. வ.). 4. தலைக்கீடு (வியாஜம்). ''திருவிழா வென்பதோர் பெயரால்'' (காஞ்சிப்பு. நகர. 70).

பெயருக்கு=ஒப்பிற்கு. கடமை யுணர்ச்சி யின்றிப் பெயருக்கு வேலை செய்கிறான். (உ. வ.).

ம. பெயர், தெ. பேரு, க. பெசர், து. புதேரு.

பெயர்—பெயரன்=(முதற்காலத்திற் பாட்டன் பெயரைப் பெற்று வந்த) மகன் மகன்.

பெயரன்—பெயர்த்தி (பெ. பா.).

பெயர்—பேர்=1. பெயர்க் குறியீடு. ''பேரும் பிறிதாகித் தீர்த்தமாம்'' (நாலடி. 175). 2. ஆள். ''அயற் பேரைக் காய்தி'' (கம்பரா. சரபங். 30). 3. உயிரி (பிராணி). ''விசும்பிற் செல்வதோர் பேர் செலாது'' (கம்பரா. நாகபா. 156). 4. புகழ். ''பேர் பரந்த பிரமாபுரம் மேவிய'' (தேவா. 62 : 3). 5. தலைக்கீடு. ''ரக்ஷிக்கைக்கு ஒரு பேர் காணும் வேண்டுவது'' (ஈடு 9 : 3 : 1). 6. ஒப்பு. பேருக்கு வேலை செய்கிறான். (உ. வ.).

ம. பேர். தெ. பேரு.

பேராண்டி=பேரன்.

பேராளன் = 1. பெருமையுடையவன். ''உம்பராளும் பேராளன்'' (திவ். பெரியதி. 7 : 4 : 4). 2. பல பெயர் தாங்கியவன். ''பேராளன் பேரோதும் பெரியோரை'' (திவ். திருநெடுந். 20). 3. மான்றலை மிருகசீரிடம்) (பிங்.). 4. சகடம். (ரோகிணி). (சூடா).

பேராளி=1. இன்னொருவர் பெயரைக் கொண்ட—வன்—வள். 2. கீர்த்தி பெற்ற—வன்—வள் (யாழ்ப்).

பெயரன்—பேரன். பெயர்த்தி—பேர்த்தி.

பெய்—பேம். பேய்தல்=மழை பெய்தல். (உ. வ.) ''பேய்ந்தும் கெட்டது, ஓய்ந்துங் கெட்டது.'' (பழ.).

பேய்—பேயு—பேசு.

ஒ. நோ: தேய்—தேயு—தேசு—வ. தேஜஸ். இ. தேஜ்

பேசுதல்=மழை பெய்வது போலச் சொற்களைச் சொரிதல்.

ஒ. நோ: பொழிதல் = மழை பொழிவது போல விரைந்தும் விடாதும் பேசுதல்.

பேசு—வ. பாஷ் (bh)—பாஷா (—பாஷை—பாடை, பாசை, பாழை).

பொழு—கொகு. பொகுத்தல்=துளைத்தல். (யாழ். அக).

பொகு—பொக்கு=1. மரப்பொந்து. (பிங்.). 2. உள்ளீடு முற்றாத கூலம் (தானியம்). 3. பொய். (உ. வ.). 4. குற்றம். தெ. பொக்கி.

தெ. பொக்கு.

பொக்கு—பொக்கம்=1. பொய். "பொக்கம் பல பேசி" (தேவா. 326 : 7). 2. வஞ்சகம். "பொய்யும் பொக்கமும் போக்கி" (தேவா. 1210 : 4). 3. குற்றம். "பொன்னங் கழல் பரவாப் பொக்கமும் பொக்கமே" (தேவா. 1017 : 1).

ம. பொக்கம், தெ. பொக்க (b).

பொக்கு—பொக்கல்=பொக்கை.

பொக்கு—பொக்கை=1. துளை. (W.). 2. பல்லின்மை. 3. குற்றம். "நீடு பொக்கையிற் பிறவியைப் பழித்து" (தேவா. 942 : 10).

தெ. பொக்க (b), க. பொக்கெ.

பொக்கை வாய் = பற்போன வாய். "பொக்கை வாயாக் கினர் சூரியனை" (தனிப்பா. ii 25 : 56).

பொக்கு—பொக்கணம் = 1. சோழியப்பை. "சுத்திய பொக்கணத்து.......கோலத்தினீர்" (திருக்கோ. 242). 2. பெருமருந்து என்னும் மூலிகை. (மலை).

ம. பொக்கணம், தெ. பொக்கணமு (b), க. பொக்கண (b).

பொக்கு—பொக்கணி=1. நெற்குத்தும் உரல். 2. விரிந்த தொப்புள். 3. குடிநீர்க் கலவகை. (யாழ். அக.)

பொக்கணி—மொக்கணி=குதிரைக்குக் கொள் கோதுமை முதலிய உணவு கட்டும் பை.

க. பக்கண. (b).

பொக்கு—பொக்கணை=1. கல் மரம் முதலியவற்றிலுள்ள பொந்து. 2. நெற்குத்தும் உரல்.

பொகு—பகு.

கால்டுவெலார் தம் திரவிட ஒப்பியல் இலக்கணத்தின் இறுதிப் பகுதியில், 'சொல்லியல் உறவுகள்' (Glossarial Affinities) என்னும் தலைப்பின் கீழ்,

"*bhaj*, to share.

bhajga, a portion. I am doubtful whether to regard these words as derived from the Tamil *pag-u*, to divide, to share, or to suppose both the Sanskrit and the Tamil to be derived from a common and earlier source. Probably the former supposition is in this case the more correct. At all events the Tamil-Malayalam *pag-u* is a pase, underived Dravidian root. A noun former from it, signifying a share, is *pang-u* (*ng* for *g*, as is after the case); and a collateral root is *pag-ir*, meaning also to share. The Sanskrit word *pangu* means lame, and is altogether unconnected with the Tamil one. Other derived nouns are *pagal*, a division daylight; *pal* (=*pagal*), a portion; and *padi* (*pagndi*). half"—(Dravidian Conparative Grammar, p. 573). என்று கூறி யிருத்தல் காண்க.

பகுதல்=(செ. கு. வி.) 1. பிளவுபடுதல். "சக்கரவாளச் சிலைபக" (திருப்பு. 841). 2. பிரிவு படுதல். "பகச் சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர்" (குறள். 187).—(செ. குன்றா. வி.). பாகம் பிரித்தல் "பகுந்துனக்கு வைத்தகோ லறைக்கு". (திருவாலவா. 30 : 50). ம. பகுக, தெ. பகுலு (g).

பகுத்தல்=1. பங்கிடுதல். "பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல்" (குறள். 322). 2. வகைப்படுத்துதல். (W.). 3. வகுத்துத் தெளிவாய்க் கூறுதல். (W.). 4. வகுத்துக் கொடுத்தல். (பிங்.). 5. வெட்டுதல். (பிங்.). 6. பிடுங்குதல். "பாதவ மொன்று பகுத்தான்" (கம்பரா. இலங்கையெரி. 55). பகுத்து நீக்குதல். "பண்ணுறு சுளைகள் கையாற் பகுத்துணக் கொடுத்த தன்றே" (சீவக. 2724).

பகு—வகு. வகுதல்=பிளத்தல். "மரல் வகுந்து கொடுத்த செம்பூங் கண்ணியொடு" (புறம். 264).

வகுத்தல்=1. கூறுபடுத்துதல். 2. இனம் பற்றிப் பிரித்தல். 3. பகிர்ந்து கொடுத்தல். 4. வெவ்வேறு துறை

கட்கு ஒதுக்குதல். "காத்த வகுத்தலும் வல்ல தரசு" (குறள். 385). 5. பெருந் தொகையைச் சிறுதொகையாற் பகுத்தல். 6. உயிர்கட்கு இன்ப துன்பக் கூறுகளை இறைவன் பிறப்பில் அமைத்தல். "வகுத்தான் வகுத்த வகையல்லால்" (குறள். 377). 7. ஒன்றை வகைப்படுத்திச் சொல்லுதல். "அவன் கதை வகுப்பாய்" (பாகவத. 1, ஸ்ரீநாரதர். 5). 8. படைத்தல். "என்னை வகுத்திலையேல் இடும்பைக் கிடம் யாது சொல்லே" (தேவா. 643 : 2). 9. கட்டியமைத்தல். "பெரும் பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்து" (நெடுநல். 78). 10. வழி யமைத்தல்.

வகு—வகுந்து=வழி. "வகுந்துசெல் வருத்தத்து" (சிலப். 11 : 167).

வகு—வகம்=வழி. (யாழ். அக.).

வகு — வக்கு = வழி. அவனுக்குக் கடன் தீர்க்க வக்கில்லை.

வகு—வகை=1. கூறுபாடு. "அவ்வகை யொன்பதும் வினையெஞ்சு கிளவி" (தொல். சொல். 146). வலம்புரி, இடம் புரி, சலஞ்சலம், பணிலம் எனச் சங்கு நால் வகைப்படும். 2. பொருட் பிரிவு. இது எவ் வகையைச் சேர்ந்தது? (உ. வ.). 3. குலப்பிரிவு. 4. முறை. கணக்குத் தப்பானாலும் வகைக்கு மதிப்பெண் கிடைக்கும். (உ. வ.). 4. ஆம்புடை (உபாயம்). இந்தத் தொல்லையினின்று தப்ப ஒருவகை சொல். (உ. வ.). 5. மனையின் பகுப்பு. "வகைமா ணல்லில்" (புறம். 398). 6. உடலுறுப்பு. "வகைநல முடைய காளை" (சீவக. 695). 7. இடப்பிரிவு "மூதூ ரிடவகை யெல்லை யெல்லாம்" (சீவக. 462). 8 விளத்தம் (விவரம்) 9. தன்மை. "வள மங்கையர் வகை யுரைத்தன்று" (பு. வெ. 9 : 50, கொளு). 10. வலக் காரம் (தந்திரம்). "வகையால் மதியாது மண் கொண்டாய்" (திவ் இயற். நான்முகன். 25). 11. வலிமை. "வகை கொண்டு வந்தேன்" (கம்பரா. பாசப். 36). 12. வாழ்க்கைப் பொருள்கள். (W.).

ம. வக, தெ. வக (g), க., து. வ கெ (g).

வகைதல்=(செ. கு. வி.) பிரிவு படுதல்.—(செ. குன்று வி.) 1. வகைப்படுத்துதல். "மந்தரை பின்னரும் வகைந்து கூறு வாள்" (கம்பரா. மந்தரை. 60). 2. வகிர்தல். "வாளை பிர்ந்தடி வல்லிதின் வகைஇ" (நற். 120). 3. ஆராய்தல். "வகையாது தொடர்ந்து" (கம்பரா. பிராட்டி. 16). தெ. வகச்சு (g).

(தொடரும்)

வங்கா

[பி. எல். சாமி. பி. எஸ்ஸி.]

(THE GOLDEN ORIOLE)

குறுந்தொகை 151ஆம் பாட்டில் வங்கா என்றொரு பறவை கூறப்பட்டுள்ளது. இந்தப் பறவை எதுவாயிருக்கலாம் என்பது மயக்கத்தைத் தந்து வந்தது. பலமுறை ஆராய்ந்ததின் பயனாக இப் பறவை எதுவாயிருக்கலாம் என்பது இப்பொழுது தெளிவாகியுள்ளது.

"வங்காக் கடந்த செங்காற் பேடை
எழாலுற வீழ்ந்தெனக் கணவற் காணாது
குழலிசைக் குரல குறும்பல வகவும்
குன்றுகெழு சிறுநெறி யரிய வென்னாது"

—குறுந்தொகை, 151.

வங்கா என்ற பறவையின் பேடையின்மேல் எழால் என்ற வல்லூறு வீழ்ந்ததால் ஆண்வங்கா நீங்கப்பெற்ற பேடை குழலிசைபோலக் குறுகிய குரலொடு பலதடவை அகவியதாகக் கூறப்பட்டுள்ளது. வங்கா என்ற சொற்குப் பாடமாற்றமாக 'வங்கர்' என்ற சொல் காட்டப்பட்டுள்ளது. நச்சினார்க்கினியர் தொல்காப்பிய உயிர்மயங்கியலில் (23) மேற்கோளாக 'தாரா, மூங்கா, வங்கா, ஆகியவற்றைக் கூறியுள்ளார். இவற்றில் தாரா என்பது காட்டுவாத்து. மூங்கா என்பது கீரிப்பிள்ளை. வங்கா என்பது குறுந்தொகையில் குறிப்பிடப்பட்ட பறவை. நச்சினார்க்கினியர் வங்கா என்ற பாடத்தையே சரியானதென்று கொண்டுள்ளார் என்பது தெளிவாகின்றது. குறுந்தொகையைப் பதிப்பித்த உ. வே. சாமிநாதய்யர் நற்றிணை 341ஆம் பாடலில் 'வங்கா வரிப்பறை' என்று வருவதாகக் காட்டி வங்கா என்ற பெயர்க்குமேற்கோள் காட்டியிருக்கின்றார். ஆனால், பின்னத்தூர் நாராயணசாமி அய்யர் பதிப்பித்த நற்றிணையிலோ பல சுவடிகளைப் பார்த்துப் பதிப்பித்த ஔவை துரைசாமிப் பிள்ளை அவர்களின் நற்றிணையிலோ இந்தப் பாடம் காணப்படவில்லை. பின்னத்தூரார் வங்கவரிப்பாறை என்று கொண்டார். ஔவை துரைசாமிப்பிள்ளையவர்கள் 'ஈங்கையிவர் பாறை' என்று கொண்டார். ஆதலின் குறுந்தொகையில் வரும் வங்கா என்ற பெயர் வேறு எந்த நூல்களிலும் வரவில்லை என்பது தெளிவாகின்றது. நச்சினார்க்கினியர் வங்கா என்று மேற்கோள் காட்டி

யிருப்பதால் வங்கா என்று குறுந்தொகை கூறும் பறவைப் பெயர் உண்மையானதே என்பது உறுதிப்படுகின்றது.

உ. வே. சாமிநாதய்யர் வங்கா என்ற பறவையை வக்கா என்று கொண்டார். வக்கா என்ற பெயர் சங்கநூல்களிலோ பிற்காலத் தமிழ்நூல்களிலோ வழங்கவில்லை. இப் பெயர் இன்றைய பேச்சு வழக்குப் பெயராகும். வக்கா என்ற பறவை 'வாக்வாக்' என்று ஓசையிடுவதன் காரணமாகப் பெயர் பெற்றதாகும். சங்ககால வங்கா இக்கால வக்காவாக இருக்க முடியாது. மற்றும் சங்ககாலத்தில் வக்கா என்ற பறவையை அன்றில் என்றழைத்தனர் என்பது ஏற்கனவே விளக்கப் பட்டுள்ளது. ஆதலின் வங்கா என்ற பறவை வக்கா என்று இன்று வழங்கும் கொக்குவகைப் பறவையன்று. வங்கா என்ற பறவைப் பெயர் வேறு மொழிகளில் வழங்கியுள்ளதா என்று ஆராய்தல் வேண்டும். வடமொழியில் கி.மு. ஆறும் நூற்றுண்டில் தோன்றிய ஐத்திரேய ஆரண்யகத்தில் "வாயாம்சி, வங்கா, வகடா, சேரபாத" என்று ஒரு வரி வருகின்றது. இவ்வரிக்கு விளக்கம் எழுதிய சிலர் இப்பெயர்கள் வங்கம், சேர நாடு ஆகிய நாடுகளைக் குறிப்பதாகக் கொண்டனர். வடமொழிப் புலவரான டாக்டர் பர்ரோ (Dr. Burrow) அதை மறுத்து வங்க நாட்டுப் பெயர் கி. மு. ஆறும் நூற்றுண்டில் தோன்றவில்லை யென்றும், கி.பி. சில நூற்றண்டுகளில் தோன்றியது என்றும் சுட்டிக்காட்டி இப் பெயர்கள் சில பறவை வகைகளைக் குறிப்பிடு கின்றன என்று கொண்டார். ஐத்திரேய ஆரண்யகத்தில் வரும் வங்கா என்ற பறவைப் பெயரும் கி.பி. முதல் இரண்டாம் நூற்றுண்டுக்குரியதான நற்றிணையில் வழங்கிய வங்கா என்ற பறவைப் பெயரும் ஒன்ரு என்பதை ஆராய வேண்டும். இந்த ஆராய்ச்சிக்குப் பிற திராவிடமொழிப் பெயர்கள் துணை புரிகின்றன. தெலுங்கு மொழியில் 'வங்காபண்டு' என்ற பெயர் ஒருவகைப் பறவைக்கு வழங்குகின்றது. தமிழில் மாம்பழக் குருவி என்றழைக்கப்படுவதே தெலுங்கில் வங்காபண்டு என்று அழைக்கப்பட்டுள்ளது. மாம்பழக்குருவியை மாங்குயில் என்றும் மாம்பழப்பட்சி என்றும் அழைப்பர். மலையாளத்தில் மஞ்சக்கிளி என்று அழைப்பர். இந்தப் பறவை மாம்பழ நிறத்தில் கருமை கலந்து காணப்படும். மாம்பழ நிறத்தில் இருப்பதாலும், மாமரத்தில் காணப்படுவதாலும் மாம்பழக் குருவி என்றழைக்கப் பட்டது. தெலுங்கு மொழியில் வங்கா என்றழைக்கப்பட்ட தற்குக் காரனம் தெலுங்கு மொழி வல்லுநரால் கூறமுடிய வில்லை. வங்கா என்பது இப்பறவையின் இயற்பெயர் என்று தெரிகின்றது. வங்கா என்பது இப்பறவையின் இயற்பெயராக

இன்றும் வழங்குவதால் இந்த மாம்பழக்குருவியே நற்றிணையில் குறிப்பிடப்பட்ட வங்கா என்ற பறவையாக இருக்கலாம். ஐத்திரேய பிராமணத்தில் கூறப்பட்ட பறவையும் இதுவேயாக லாம். பழந்திராவிட மொழியிலிருந்து வங்கா என்ற பெயரை வடமொழி பெற்றிருக்க வேண்டும். ஐத்திரேய பிராமணத்தில் வரும் பறவைப் பெயர்களில் 'வாயாம்சி' காக்கை யென்றும் வங்கா, வகடா, சேரபாத என்ற பறவைகள் எவை என்பது தெளிவாகத் தெரியவில்லை என்றும் கூறி யுள்ளனர். ஆதலின் வங்கா திராவிட மொழிப் பெயராகவே இருக்கலாம். சேராக்கொக்கு என்ற பெயரில் ஒரு நீர்ப்பறவை மலையாளத்தில் வழங்குகின்றது. சேரபாத என்ற பறவைப் பெயரோடு இப் பறவை ஒத்துள்ளது. மாம்பழக்குருவியை ஒரு குறிப்பிட்ட பருவத்தில்தான் காணமுடியும். இப் பறவையும் ஓரளவு வலசை செல்லுமென்று கூறுவர். இந்தக் குருவி குறிப் பிட்ட பருவத்தில் மட்டும் வருவதால் சங்க நூல்களில் ஒரே பாடலில் கூறப்பட்டதாகக் கருதவேண்டும். பிற்காலத்தில் இதையும் ஒருவகைக் குயிலென்று கருதினர்.

வங்கா என்ற பறவை மாம்பழக்குருவியாக இருக்கலாம் என்பதற்குப் பிற சான்றுகளும் உள்ளன. நற்றிணையில் வங்கா குழலிசை போலக் குரலிடுவதாகக் கூறப்பட்டுள்ளது. பறவை நூலாரும் மாம்பழக் குருவி குழலைப்போலவே கூவும் (loud melodious flute like notes) என்று எழுதியுள்ளனர். வேய்ங் குழலினது இசையைப் போன்ற குரலுடையது வங்கா என்று கூறியது பொருத்தமே. வங்கியம், வங்கால் என்ற இசைக் கருவிகள் தமிழிலக்கியத்தில் கூறப்பட்டுள்ளன. வம்சம் என்ற மூங்கிலைக் குறிக்கும் வடசொல்லிலிருந்து வங்கியம் என்ற பெயர் வந்ததாகக் கூறுவர். ஆனால், வங்கு என்பதே வேர்ச்சொல் லாகத் தெரிகின்றது. வங்கு என்பது உள்ளே துளையாக இருப்பதைக் குறிக்கும். உள்ளே துளையாக இருக்கும் மூங்கிலால் ஆன இயத்தை (இசைக்கருவியை) வங்கியம் என்றனர். வங்கியம் போன்று இசைக்கும் பறவையை வங்கா என்றழைத்தனர்.

வங்கா என்ற மாம்பழக்குருவி மைனா அளவினதாக இருக்கும். இது முசுக்கட்டைப்பூச்சி என்கிற கம்பளிப் பூச்சியை நன்கு உண்ணும். அதனால் முசுக்கொட்டாம் பூச்சுக்குருவி என்றும் அழைப்பர். முசுக்கட்டை செடியில் காணப்படும் புழுவிற்கு முசுக்கட்டாம் பூச்சியென்றும் அதைத் தின்னும் பறவையை முசுக்கட்டாம் பூச்சிக் குருவியென்றும் நாட்டு மக்கள்

அழைப்பது கவனிக்கத்தக்கதாகும். ஆண் வங்காப் பறவையை எழால் அடித்துக்கொன்றதாகவும் அதனால் ஆண் துணையைக் காணாது பெண் வங்கா அகவினதாகவும் குறுந்தொகை கூறியுள்ளது. மாம்பழக்குருவியை எழால் எனும் வல்லூறு அடித்துக் கொல்வது இயற்கையில் காணக் கூடியது. ஆண் பெண்ணாக இணைந்து வாழ்ந்ததைக் கண்டே ஆண் பறவையைக் கணவன் என்று குறுந்தொகை குறிப்பிட்டுள்ளது. மாம்பழக் குருவி கூவும்போது 'ஒருவகை குறுகிய ஓசையுடன் திருப்பித்திருப்பி ஒலி செய்யும் என்று கூறுவர். குறுந்தொகையிலும் குழலிசை போல 'குறும்பல அகவும்' என்று கூறப்பட்டுள்ளதைக் கவனிக்க வேண்டும். குறிய பல ஒலிகளை வெளிவிடுவதாகக் கூறியிருப்பது பொருத்தமேயாகும்.

இதுவரை கூறிய சான்றுகளிலிருந்து குறுந்தொகையில் கூறப்பட்ட வங்கா என்ற பறவை மாம்பழக்குருவி யென்பது தெளிவாகின்றது. இதையே தெலுங்குமொழியில் 'வங்காபண்டு' என்றழைக்கின்றனர். வடமொழியில் ஒரே இடத்தில் வங்கா என்றழைத்தனர். வங்கா என்ற மாம்பழக் குருவியை Golden Oriole, Black-headed Oriole என்றழைப்பர். பறவைநூலார் Oriolus oriolus kundoo என்றழைப்பர்.

மேலோரும் கீழோரும்

"......நால்வகை நிலத்தும் அவ்வந் நிலத்து மக்களின் தொழில் வேறுபாடு பற்றிப் பல் வகுப்பினராகப் பிரிக்கப் பட்டோருட், கொலையும் புலாலுணவும் மறுத்து ஓதல் வேட்டல் அரசு புரிதல் வாணிகஞ் செய்தல் உழவு நடாத்தல் என்னும் உயர்ந்த தொழிற் கண் நிலைபெற்று நின்றோர் 'மேலோர்' எனவும், அவர்தம் ஏவல்வழி நின்று, அக் கொலையும் புலையும் நீக்காமற் பெரும்பாலுங் கைத்தொழில் செய்யும் அவ்வளவில் நின்ற ஏனை வகுப்பினர் 'கீழோர்' எனவும் இரு பெரும் பிரிவில் வகுக்கப்பட்டு, அவரவரும் அறிவாலும், ஒழுக்கத்தாலுந் தொழிலாலுந் தத்தமக்குள்ள உயர்வு தாழ்வுகளை நினைந்து, கீழோர் மேலோர்க்கு அடங்கி நடக்கவும் மேலோர் தங்கீழ் வாழுங் குடிமக்களை இனிது பாதுகாத்து வரவும், இவ்வாறு மிகவும் அமைதியாகவும் ஒழுங்காகவும் பண்டைத் தமிழ் மக்கள் வாழ்க்கை இனிது நடைபெறலாயிற்று.

—மறைமலையடிகளார்

(வேளாளர் நாகரிகம், பக். ௩௧)

இறைவிப்பித்தன் காவியம்

அல்லது

அபிராமிபட்டர் புராணம்

[ஆசிரியர் 'அடியன் மணிவாசகன்']

(முன் இதழ் சரு௬ஆம் பக்கத் தொடர்ச்சி)

33. செல்வத்தின் நிலையாமை யுணர்ந்து நன்மை
சேர்நெறியிற் கண்ணோடி வணிகம் செய்து
நெல்லரிசி கல்லரிசி கலக்கா வண்ணம்
நேர்மையொடு பொதுநலத்தை யுயிராய்க் காணும்
வல்லமையும் வந்தவரை யினிது நோக்கி
வளமளித்து மகிழ்கண்டு மகிழும் நெஞ்சும்
நல்லவர்கள் நிமிர்கின்ற கடவூர் தன்னை
நானிலமும் போற்றியன்பு செய்யு மன்றே!

34. உளநூலைக் கற்றோரும் சைவ வுண்மை
உயிர்நூலை யுணர்ந்தோரும் வாழ்க்கைப் போராம்
களநூலைக் கண்டோரும் கலைகள் பேசும்
கவின்நூலை வென்றோரும் காதல் மின்னும்
வளநூலை யிசைப்போரும் புதுமை காட்டும்
வகைநூலைச் செய்வோரும் அரசை யாளும்
குளநூலிற் குளிப்போரும் கழக மாகக்
குடியிருக்கும் நல்லூராம் கடவூர் வாழி!

35. எக்குடியிற் பிறந்தாலும் ஒழுக்கம் மேவி
ஏங்குமுயிர் கண்டவற்றை யின்பஞ் செய்யும்
அக்குடியே நற்குடியாம்! கொல்லா நோன்மை
அறங்காக்கும் அன்புடையார் தெய்வ வாழ்வார்
திக்குயரும் புகழுடையார் பொருளை யில்லார்
தீந்தமிழின் மரபுகளைப் பேணும் வல்லார்
இத்தகையோர் அந்தணராம் அன்றி மற்றோர்
ஏன்பிறந்தார் எனவாழ்வார் நகரம் ஈதே.

௫. பட்டர் பிறப்பு

36. இறைவிக்குத் தொழும்புடையார் குடியில் இங்கே
இணையில்லாத் தந்தைக்கும் தாய்க்கு மன்றி
இறைவற்கும் இறைவிக்கும் பிறந்த பட்டன்
எழிற்பரிதி போல்வந்தான் உலகம் உய்ய!

நறைபில்கும் தாமரையோர் மலர்ந்தார் கண்டே
நல்லெண்ணத் தொட்டிலிலே வளர்ந்தான் ஐயன்
கறைமல்கும் நிலவுலகைக் கண்டான் போலும்
கத்தியழக் கேட்டவொலிப் பொருட்கள் கோடி!

37. பிறப்பதற்கு வித்தான வினையை நோமோ
பேசுதற்குச் சொல்லறியா நாவை நோமோ
திறப்பதற்கு முடியாத நெஞ்சை நோமோ
தீமைகளைக் காணுமென்று கண்ணை நோமோ
சிறப்பதற்குத் துடிக்காத கால்கை நோமோ
சீற்றத்தைக் காட்டுகிற முகத்தை நோமோ
மறப்பதற்கு மாட்டாத முனைப்பை நோமோ
மாண்புதரும் இக்குழந்தை ஏன்தான் நோமோ?

(தாய் தாலாட்டி வளர்த்தல்)

38. முகங்கறுக்க அழுவதுவோ? அப்பா! கண்ணே!
முத்தந்தான் வலித்ததுவோ அரசே! நீயென்
அகங்கறுக்க வைப்பதுவோ வேண்டா ஐயா!
ஆரமிழ்தம் இப்பொழுதே தந்தேன் இன்னும்
நகங்கிறுக்கப் பூவுடலை விட்டால் என்னை
நாயகன்தான் ஏசாரோ? இரங்கிக் கண்கள்
உகுமழையை யொழித்திடுவாய் தாலே தாலோ
ஓதுவதைக் கேட்டுறங்கு தாலோ என்பாள்.

39. தெய்வவொளிச் சோலையிலே பிறந்த சிட்டே!
தேம்பிடுதல் ஏனப்பா? தெவிட்டா இன்பப்
பைங்கிளியும் உன்னோடு பழகி யாடப்
பார்த்திருக்கும்; பண்டங்கள் பழங்கள் ஊட்டும்;
உய்யுநெறி நடைகாட்டும் மயிலும் வேலும்
உனைக்காண ஏங்குமடா! கண்ணே இப்போ
மைகரையப் பார்ப்பேனோ தாலே தாலோ
மனக்குறைதான் சொல்லிவிடு தாலோ என்பாள்.

40. கண்சிமிட்டிக் கண்சிமிட்டி யுறங்கும் மொட்டைக்
காதலித்துத் தேனுறிஞ்ச முந்தித் தாயாம்
வண்டிருந்து வாடிவிடும்! குழந்தை சற்று
வாட்டந்தான் தீரட்டும் என்னும்! தெய்வம்
கொண்டிருக்கு மிங்கென்னும் பன்சால் தொட்டில்
கொடிபிடித்து விழித்திருக்கும் செவ்வி மேவிக்
கண்டிருக்குங் கன்னியெல்லாம் ஏங்கி யேங்கிக்
கடிமணத்துக் கருத்ததனைத் தாங்கிச் சோர்வார்

41. ஓம் இறைவி மந்திரத்தைப் பசித்த போதில்
உரைமருந்தாய் உரைத்தூட்டி ஊட்டங் காண்பாள்
தாம்திமிதோம் எனவுதைக்குங் கால்கள் சேர்த்துத்
தாமரையாய்க் கண்வைத்தே ஒற்றி யொற்றி
ஓம்வழிய இதழோரம் முத்தத் தாலே
உறிஞ்சியுயிர் இனித்திடுவாள்! மகனைப் பெற்ற
தீம்பொழுதை யெண்ணியெண்ணித் திளைக்கு மின்பம்
தீட்டிடவே என்பாட்டும் போதா வன்றே!

42. வளர்ந்துவரும் குருத்திற்குச் சுண்ணம் பூசி
வளமான தாய்ப்பாலில் அருளை வீசிக்
குளிர்ந்துவரும் தேவாரத் தாலி லாட்டிக்
குறையில்லாக் கலைப்பொருளை நெஞ்சிற் காட்டி
ஒளிர்ந்துவரும் முகத்தினிலே தெய்வங் கண்டும்
ஓடிவிளை யாடையிலே செல்வங் கொண்டும்
களிசிறந்த தாயவனைக் கண்ணில் வைத்துக்
காக்கின்ற திறஞ்சொல்ல அவளே வேண்டும்!

43. பொங்கிவரும் எழிற்பிழம்பே என்கோ வையம்
புரப்பதற்கு வந்தவொரு மழையே என்கோ
தங்கிவரும் அறங்காக்கும் முருகே என்கோ
தண்ணுலகைப் படைத்தவளின் அருளாம் ஆழி
முங்கிவரும் இளம்பரிதி யென்கோ வாழ்வின்
முடிவான மெய்யுணர்வே என்கோ இல்லில்
துங்கவொளி மணிபரப்பி வளர்ந்தான் காளை
துயரில்லாத் துறக்கமதை யிங்கே கண்டார்!

(கல்வி)

44. முப்போதும் திருமேனி தீண்டும் தந்தை
முதலான மகன்கல்வி கற்கச் செய்தார்
எப்போதும் எந்தேவிக் கல்வி யன்றி
ஏடெடுத்துங் காணுமெய் யறிஞன் ஆனான்!
துப்பான அறிவொளியில் முகத்தைக் காட்டித்
துயரான முகிற்கூட்டம் சூழா வண்ணம்
கப்பான உறவாசை வெட்டி யன்னைக்
கவினன்பில் அருள்காணத் திரிந்தான் ஊரில்!

45. முகத்திற்கும் ஒருமூடி போட்டாற் போல
மூடத்தில் மூழ்கிடுவார் குருடர்! தெய்வம்
அகத்திற்கு வரவேண்டு மானால் அங்கே
அலர்கண்ணைப் பெற்றிருத்தல் வேண்டும் இன்பம்

புகத்திக்கு நோக்கிடுதல் வேண்டா ; இங்கே
புரிந்திருந்தால் தவவின்பம் சாலும்! வாய்மை
மிகத்தக்க உணர்வாலே நெறியைக் கண்டான்
மீதூர்ந்து செல்கின்றுன் உயிர்கள் காண!

(உலகம் காணல்)

46. ஊர்விட்டு வையத்தைச் சுற்றிச் சுற்றி
உலர்ந்திட்டு நெஞ்செல்லாம் துன்பில் ஆழ்ந்தான்
வேர்விட்டு வன்பெல்லாம் விளையக் கண்டு
வேதனையில் விழுந்திட்டு மயங்கிச் சோர்ந்தான்
தேர்விட்டே அலைகின்ற மாலை போலத்
தெருவெல்லாம் நடிப்போரைக் கண்டு மாய்ந்தான்
யார்விட்டுக் கொடுக்கின்றுர் ஏழை வாழ
நல்லோர்கள் எங்கேயோ? என்று தேய்வான்!

47. பஞ்சாகப் பறப்பதுவோ பொருளின் ஆசை?
பஞ்சைகளை யழிப்பதுவோ வலியார் நெஞ்சம்?
நஞ்சாக மாறுவதோ கற்றுேர் எண்ணம்
நாயாகத் திரிவதுவோ மற்றுேர் கால்கள்
கஞ்சன்தான் உயருவதோ காசில்? பொய்யைக்
காதலித்து வாழுவதோ மடமை வாழ்வைத்
தஞ்சந்தான் அடைவதுவோ? *சீச்சீ* இந்தத்
தரையினையார் படைத்ததுவோ? வெட்கம்! வெட்கம்!!

48. முகப்பிணிக்கு மருந்திடுவார்; முத்தும் பொன்னும்
முடியணி பார்த்திருப்பார்; கற்புச் சாகும்
அகப்பிணிக்கு மருந்திருந்தும் காணுர் அந்தோ!
அணுப்பொழுதும் விற்றிடுவார் அடிமை யாவார்
மகப்பெறினும் உகப்புறினும் நன்றி யில்லார்
மானமிலார் வகுப்புவெறி படைத்துத் தாழ்த்தி
உகவிழிநீர் கண்டிருப்பார் *சீச்சீ*! இந்த
உலகத்தைப் படைத்ததியார்? வெட்கம்! வெட்கம்!!

49. வாழவகை தெரியாதார் வயிற்றைப் பேணி
வன்குகையில் அடைந்திருப்பார் பிறரை யென்றும்
விழவகை செய்திடுவார் அன்னை நாட்டு
வியன்பண்பைக் குலைத்திடுவார் தெய்வத் தொண்டும்
சூழவகை புரியாதார் புகழை யில்லார்
சுழல்வாழ்வுக் கூட்டத்தார் மனித வாய்ப்பும்
ஆழவகை செய்திருப்பார் *சீச்சீ*! இந்த
ஆருலகைப் படைத்ததியார்? வெட்கம்! வெட்கம்!!

(தொடரும்)

மொழியியல் ஆராய்ச்சிக் கட்டுரை
ஒன்பது

[மு. வை. அரவிந்தன், எம். ஓ. எல்.

தமிழ்த்துணைப் பேராசிரியர், அரசினர் கலைக் கல்லூரி,
வேலூர். வ. ஆ. மாவட்டம்]

எண்ணுப் பெயர்களில் 'ஒன்பது' பற்றிய ஆராய்ச்சி விரிவானது. மொழியியல் அறிஞர் பலர் இந்த எண்ணைப் பற்றி அவ்வப்போது ஆராய்ந்து தம் கருத்துகளைக் கூறியுள்ளனர். இன்று நிலவி வரும் பலவேறு கருத்துகளை அறிவதோடு, தொடர்ந்து ஆராய்ச்சியில் ஈடுபடுவது இன்பம் பயக்கும் பணியாகும்.

ஒன்பது என்னும் எண்ணின் வரலாற்றையும் அதன் உண்மையான வடிவத்தையும் அறிவதற்கு முன், அந்த எண்ணைப் பற்றி எழுகின்ற சில ஐயங்களைக் காண்போம் :

முதலாவதாக

'ஒன்பது' என்பதில் இரண்டு சொற்கள் உள்ளன. ஒன்+பது என்று அதனைப் பிரிக்கலாம். ஒன்று இரண்டு மூன்று நான்கு ஐந்து ஆறு ஏழு எட்டு பத்து ஆகிய எண்ணுப் பெயர்கள் யாவும் ஒரு சொல்லாகவே உள்ளன. ஒன்பது மட்டும் இருசொற்களால் ஆகியுள்ளது. இவ்வாறு மாறுபட்டு இருப்பது ஏன்?

இரண்டாவதாக

பத்து என்னும் எண், பது என்று குறுகி நிற்கும். இருபது முப்பது நாற்பது ஐம்பது அறுபது எழுபது எண்பது ஆகிய சொற்களில் உள்ள 'பது' என்பது பத்தின் குறுகிய வடிவமே. பத்தை (10) ஒரு பது என்று கூறுவதும் உண்டு. 'பது' என்பது 'பத்து' என்பதன் குறுக்கம் ஆதலின், 'ஒன்பது' என்பதில் உள்ள 'பது', பத்து என்பதன் குறுக்கமே. ஒன்று இரண்டு என்னும் வரிசையில் எட்டுக்குப் பின்னும், பத்திற்கு முன்னும் (எட்டு-பத்து இரண்டிற்கும் நடுவில்) உள்ள எண்ணாகிய ஒன்பதில், பத்து என்பதன் குறுகிய வடிவமாகிய 'பது' என்னும் சொல் இடம் பெறுவது ஏன்?

மூன்றாவதாக

ஒன்பது என்பதில் உள்ள 'பது', பத்தின் குறுக்கம் ஆயின், 'ஒன்' என்பது எதனைக் குறிக்கும்? அதன் முழுமையான வடிவம் யாது?

நன்காவதாக

பழந்தமிழ் நூல்களில் 'தொண்டு' என்னும் சொல் ஒன் பதைக் குறிக்கின்றது. பரிபாடலில்,

"...ஒன்றென,
இரண்டென மூன்றென நான்கென ஐந்தென
ஆறென ஏழென எட்டென தொண்டென" (பரி-3 : 77-79)

என வரும் அடிகளில், எண்களைக் குறிப்பிடும் இடத்தில் 'தொண்டு' என்னும் சொல் ஒன்பதைக் குறிக்கின்றது.

தொல்காப்பியர் செய்யுளியலில் (97), 'தொண்டு தலையிட்ட பத்துக் குறை எழுநூறு' என்று அச் சொல்லை 9 என்னும் எண்ணைக் குறிக்கப் பயன்படுத்துகின்றார்.

பத்துப் பாட்டில் உள்ள 'மலைபடுகடாம்' பாடல், யாழ்க் கருவியில் உள்ள வார்க் கட்டுகளின் எண்ணிக்கையை,

"தொடித்திரிவன்ன தொண்டுபடு திவவின்"

என்று குறிப்பிடுகின்றது. இங்கே 'தொண்டு' என்பது 9 என்னும் எண்ணைக் குறிக்கின்றது.

இத்தகைய இடங்களை நோக்கும் போது, தொண்டு என்பது, மிகப் பழைய சொல் என்பது விளங்கும். அவ்வாறு இருக்க அச் சொல்லிற்கு உரிய இடத்தை 'ஒன்பது' எவ்வாறு பெற்றது? 'தொண்டு' இருக்க வேண்டிய இடத்திற்கு, பொருள் விளங்காத—பொருத்தம் இல்லாத ஒன்பது எப்படி வந்தது?

இத்தகைய வினாக்களுக்கு விடை காண்பதற்கு 90, 900 போன்ற எண்களுக்கு இப்போது வழங்கி வரும் பெயர்களின் வரலாற்றையும் வடிவத்தையும் ஆராய்தல் வேண்டும். இப்போது,

90—தொண்ணூறு
900—தொள்ளாயிரம்

என்ற சொற்கள் வழங்கி வருகின்றன. இவற்றின் தன்மையை நோக்குவோம்:

இருபது	அறுபது
முப்பது	எழுபது
நாற்பது	எண்பது
ஐம்பது	

என்ற வரிசையில், "90' என்னும் எண்ணைக் குறிக்க, 'பது' என்பதை ஈறாக உடைய ஒரு சொல்லே வருதல் வேண்டும்.

ஆனால் 'நூறு' என்னும் சொல்லை இறுதியில் கொண்ட தொண்ணூறு, எண்பதுக்குப்பின் வருகின்றது. இவ்வாறே,

இருநூறு	அறுநூறு
முந்நூறு	எழுநூறு
நானூறு	எண்ணூறு
ஐந்நூறு	

என்னும் வரிசையில், '900' என்னும் எண்ணைக் குறிக்க 'நூறு' என்று முடியும் ஒரு சொல்லே வருதல் வேண்டும். ஆனால், ஆயிரம் என்னும் இறுதியை உடைய 'தொள்ளாயிரம்' என்னும் சொல் எண்ணூற்றுக்குப்பின் வருகின்றது.

இந்த இரண்டு இடங்களிலும் இவ்வாறு தொண்ணூறு, தொள்ளாயிரம் என்னும் சொற்கள் வருவதை நோக்கும்போது குழப்பம் இருப்பது புலனாகின்றது. இந்த நிலை 9 என்னும் எண்ணைக் குறிக்கும் பெயர்க்கும் இருப்பதை முன்னர்க் கண்டோம்.

9, 90, 900 ஆகிய எண்களைக் குறிக்கும் சொற்களின் வடிவத்தை ஒப்பிட்டு ஆராய்ந்தால் குழப்பம் தீர்ந்து உண்மை வெளிப்படும்.

ஒன்பது தொண்ணூறு தொள்ளாயிரம்

ஆகிய மூன்று சொற்களின் முற்பகுதியில் முறையே ஒன், தொண், தொள் ஆகியவை உள்ளன. தொண்ணூறு என்பது, 9 என்னும் எண்ணைக் குறிக்கும் தொண்டு என்னும் பழைய சொல்லுடன் நெருங்கிய தொடர்புடையதாகும்.

தொண்டு + நூறு = தொண்ணூறு
$$9 \times 100 = 900$$

என்று ஆகும். ஆனால், இப்போது தொண்ணூறு என்னும் சொல் 900 என்னும் எண்ணைக் குறிக்காமல் 90 என்னும் எண்ணையே குறிக்கின்றது.

தொள்ளாயிரம் என்பது தொண்டு + ஆயிரம் என்னும் இரு சொற்களால் ஆன தொடர். தொண்டு என்பதற்குத் 'தொள்' என்பது பகுதி.* எனவே

தொண்டு + ஆயிரம்
தொள் + ஆயிரம்
தொள் + ள் + ஆயிரம்
தொள்ளாயிரம்

---

* கொண்டு என்பதன் பகுதி. 'கொள்'

என்று ஆகும். இவ்வாறு தொள்ளாயிரம் என்பதனைத் தொண்டு என்ற சொல்லுடன் தொடர்புபடுத்திக் காண முடிகின்றது. ஆகவே,

தொண்டு + ஆயிரம் = தொள்ளாயிரம்
9 × 1000 = ௯000

என்று வழங்குதல் வேண்டும். இதன்படி 9000 என்னும் எண்ணைக் குறிக்கத் தொள்ளாயிரம் என்னும் சொல் பயன்படுதல் வேண்டும். ஆனால், இன்று அச் சொல் 900 என்னும் எண்ணைக் குறிக்கவே பயன்படுகின்றது.

இனி,

தொண்டு + பத்து

என்னும் சொற்களை இணைத்துக் காண்போம்.

தொண்டு + நூறு = தொண்ணூறு
தொண்டு + ஆயிரம் = தொள்ளாயிரம்

என்று வடிவம் பெறுவது போல,

தொண்டு + பத்து = தொண்பத்து
9 × 10 = 90

என்று ஆதல் வேண்டும். ஆனால் இன்று தொண்பது என்ற சொல்வழக்கு இல்லை,

எண் வரிசையில், தொண்டு தொண்பது தொண்ணூறு தொள்ளாயிரம் ஆகியவற்றிற்கு உரிய இடங்களை வரலாற்று அடிப்படையில் அமைத்துக் காண்போம்:

I	II	III	IV
ஒன்று	பத்து	நூறு	ஆயிரம்
இரண்டு	இருபது	இருநூறு	ஈராயிரம்
மூன்று	முப்பது	முந்நூறு	மூவாயிரம்
நான்கு	நாற்பது	நானூறு	நாலாயிரம்
ஐந்து	ஐம்பது	ஐந்நூறு	ஐயாயிரம்
ஆறு	அறுபது	அறுநூறு	ஆறுயிரம்
ஏழு	எழுபது	எழுநூறு	ஏழாயிரம்
எட்டு	எண்பது	எண்ணூறு	எண்ணாயிரம்
தொண்டு	தொண்பது	தொண்ணூறு	தொள்ளாயிரம்
பத்து	நூறு	ஆயிரம்	பத்தாயிரம்

இவ்வாறு இருக்க வேண்டிய அமைப்பு இன்று பெரிதும் மாறியுள்ளது. தொண்டு தொண்பது தொண்ணூறு தொள்ளாயிரம் ஆகிய எண்ணுப் பெயர்களுக்கு உரிய இடத்தையும் இன்றுள்ள இடத்தையும் பின்வருமாறு அமைக்கலாம் :

எண்	உரிய இடம்	உள்ள இடம்
9	தொண்டு	ஒன்பது
90	தொண்பது	தொண்ணூறு
900	தொண்ணூறு	தொள்ளாயிரம்
9000	தொள்ளாயிரம்	ஒன்பதாயிரம்.

இவற்றை நோக்கினல் பின்வரும் உண்மைகள் புலப்படுகின்றன :

1. தொண்டு (9) என்னும் சொல் மறைந்துவிட்டது.
2. தொண்பது (90) வழக்கில் இல்லை
3. தொண்ணூறு (900) என்னும் சொல்லிற்குரிய இடத்தை இன்று தொள்ளாயிரம் பற்றிக் கொண்டுள்ளது.
4. தொள்ளாயிரம் (9000) என்னும் சொல்லிற்குரிய இடத்தில் ‘ஒன்பது ஆயிரம்’ என்னும் சொற்றொடர் உள்ளது.

இந்த முடிவுகளை நோக்கும்போது, ‘தொண்டு’ என்னும் சொல் மறைந்துவிட்டதால் அதன் இடத்தைத் தொண்பது பற்றிக் கொண்டது என்று கருத வேண்டியுள்ளது. காலப் போக்கில் தொண்பது என்னும் சொல் ஒன்பது என்று திரிந்தது என்று நினைக்கவேண்டியுள்ளது. இக் கொள்கையை நிலை நிறுத்த ஏனைய திராவிட மொழிகளில், 9 என்னும் எண்ணைக் குறிக்க வழங்குகின்ற சொற்களை நோக்குதல் வேண்டும்.

‘தொண்பது’ என்பதனோடு நெருங்கிய தொடர்புடையதாய், ‘தொம்மிதி’ (9) என்னும் தெலுங்குச் சொல் உள்ளது. கன்னடத்தில் ‘90’ என்னும் எண்ணைக் குறிக்க ‘தொம்பத்து’ என்னும் சொல் வழங்குகின்றது. இவற்றால், தொண்பது (90) என்னும் சொல் ஒன்பது என்று காலப் போக்கில் திரிந்து, தனக்கு உரிய இடத்தை விட்டு (9) என்னும் எண்ணுக்கு உரிய இடத்திற்கு) இறங்கி வந்துவிட்டது என்பது புலனாகின்றது. ஒரு சொல்லின் முதலில் நிற்கின்ற உயிர்மெய் எழுத்தில் உள்ள ‘மெய்’ எழுத்துக் கெடுதலும் (கசடு—அசடு, சான்றோர்—ஆன்றோர், சமணர்—அமணர்) ணகர னகரங்கள் தம்முள் மாறி

நின்று ஒலிப்பதும் உண்டு. (கருனை—கருணை). அந்த முறைப்படி,

தொண் பது ஒ+ன்+பது
(த்+ஒ) ண்பது ஒன்பது
ஒ+ண்+பது

என்று மாறியதாய்க் கருதலாம்.

தொண்டு (9), தொண்பது (90), தொண்ணூறு (900), தொள்ளாயிரம் (9000) ஆகிய எண்ணுப் பெயர்கள் பலவேறு வகையாய் மாறி, தமக்குரிய இட மதிப்பை விட்டு இறங்கி நிற்கும் குழப்பமான நிலை, எல்லாத் திராவிடமொழிகளிலும் உள்ளது.

மொழி	9	90	900
தமிழ்	ஒன்பது	தொண்ணூறு	தொள்ளாயிரம்
மலையாளம்	ஒன்பத	தொண்ணூற	தொள்ளாயிரம்
கன்னடம்	ஒம்பத்து	தொம்பத்து	ஒம்பை நூறு
தெலுங்கு	தொம்மிதி	தொம்பை	தொம்ம நூறு

இப்போது உள்ள குழப்பத்தை மாற்றி மீண்டும் அந்த எண்ணுப் பெயர்களை முன்னைய நிலைக்குக் கொண்டு சென்றால் பின்வருமாறு அவை அமையும்:

9 — தொண்டு
99 — தொண்பது தொண்டு
999 — தொண்ணூற்றுத் தொண்பது தொண்டு
9999 — தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றுத் தொண்பது தொண்டு
99999 — தொண்பத்து ஆயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றுத் தொண்பது தொண்டு.

இத்தகைய வழக்கை இனிமேல் கொண்டுவந்து வாழச் செய்ய இயலாது பிழையான வழக்கில்—குழப்பமான நிலைமையில் தோய்ந்து பழகிவிட்ட நம் உள்ளம், பிழையற்ற வழக்கை—தெளிவான நிலைமையை ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. ஒன்பது தொண்ணூறு தொள்ளாயிரம் முதலிய பிழையான சொல் வடிவங்களும் அவற்றிற்குரிய இட மதிப்பும் இன்று போல் என்றும் நின்று நிலவும்.

தண்டபாணி அடிகள் என்ற

திருப்புகழ் முனிவர் பாராட்டும் திருப்புகழ் முனிவர்

[தி. செ. முருகதாச அடிகள்]

திரு என்ற சொல், செல்வம், தெய்வப்பண்பு ஆதிய பொருளைத் தருவதாகும். புகழ் என்பது, சிறந்த ஒருவரைப் பாராட்டுவதே யாயினும், அதைவிட இறைவனைப் பற்றிக் கூறும்புகழே பொருள் சேர்புகழ் என்பர் திருவள்ளுவர். ''இருள் சேர் இருவினையும் சேரா இறைவன், பொருள்சேர்புகழ்புரிந்தார் மாட்டு'' என்பது திருக்குறள். அவ்வாறு முருகப் பெருமான்மீது, அருணகிரிநாதர் பாடிய சந்தப்பாடல்கள் ''திருப்புகழ்'' என்ற சிறப்புப் பெற்றது, சைவசமயாசாரியர் பாடிய அருட்பாடல்கள் ''தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு' என்றாற் போல. திருஞானசம்பந்தப் பெருமானே 'திருநெறியதமிழ்' என்று கூறியுள்ளார். 'அம்பலப் பாட்டே அருட்பாட்டு, அல்லார்தம் பாட்டெல்லாம் மருட்பாட்டு'' என்பர் வடலூரடிகள். திருப்புகழ் போலவே, அருணகிரிநாதர் பாடிய வகுப்பும் திருவகுப்பு எனப் பெயர் பெற்றது. திருப்புகழும், திருவகுப்பும், எந்தக் கவியினும் சிறந்த சந்தக் கவிகளானமையாலும் தனிச் சிறப்பேற்பட்டது.

கந்தரந்தாதி, கந்தரலங்காரம், கந்தரநுபூதி, வேல் விருத்தம், மயில்விருத்தம், இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு சிறப்புடையது. கந்தரலங்காரம், முருகன் சிறப்பியல்களைப் படர்க்கையாயும், முன்னிலையாயும் மக்கட்குக் கூறும் அறிவுரை யாயும், தன்நெஞ்சுக்கறிவுறுத்துவதாயும், தன் அனுபவங்களைக் கூறுவதாயும் உள்ள பாடல்கள் பல. முருகப்பெருமான் பல சிறப்புடையவனாவதற்குத் துணையாகப் பல பொருள்கள் ஒன்று சேர்ந்ததும் ஒரு காரணம். வாகனமாயமைந்தது அழகிய மயில், கொடியாயமைந்தது வீரமிக்க சேவல், படைகள் பலவற்றிலும் வெற்றி மிக்கது வேல் ஆதியனவாம்.

வகுப்புப் பாடிய அருணகிரிநாதர், வேலுக்குத் தனிவகுப்புப் பாடினர். அலங்காரத்தில் வேலைப் பற்றிக் கூறிய பாடல் பல. முருகன் திருக்கரங்கள் பன்னிரண்டில், வேலைப் பிடித்த கையையே மிகவும் சிறப்பாகப் பாடினர். செங்கையில் வேல் கவி 3, வேலே விளங்குகையான் 28, திருக்கை வேல் 30, கையில் வேலுக்கு 62, என்பதுபோலப் பல கூறினர். எல்லா வற்றினும் மேலாக, 'சூலம்பிடித்து' என வருகின்ற பாடலில் ''வேலும் திருக்கையும் உண்டே நமக்கொரு மெய்த்துணையே' என்பது

வாழ்வின் இறுதியில் வரும் எமவாதைக்கும் அஞ்சாத வீரத்தையே நம்பிக் கூறும் அருணகிரிநாதர் பாடல் சிறப்பாயுள்ள தென்பதையே, வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள், ஒரு கவியிற் பாடி நெஞ்சுக்கறிவுறுத்தினர்.

"சூலம் பிடித்தெம பாசஞ் சுழற்றித் தொடர்ந்துவரும்
காலன் றனக்கொரு காலும்அஞ் சேன்கடல் மீதெழுந்த
ஆலங் குடித்த பெருமான் குமாரன் அறுமுகவன்
வேலுந் திருக்கையும் உண்டே நமக்கொரு மெய்த்துணையே"

என்பது கந்தரலங்காரப் பாடல்.

முருகப் பெருமான் கைகளில் உள்ள படைகள் பதினொன்றும், பதினொர் உருத்திரர்கள் என்பதாம். வேல், ஞானசத்தி "எப்படைக்கும் நாயகமாவது" என்று சொல்லிப் பரமன், முருகப் பெருமானுக்குதவினர். "ஞானந்தான் உருவாகிய நாயகன்" என்பது கந்த புராணம். அப் பெருமான் கையிலிருப்பதும் ஞானசத்தி வேல். அது, அஞ்ஞானமான மாயையை அறச் செய்வது. அஞ்ஞானம் ஆன்மாக்களைப் பற்றியுள்ளது. அதை யறச் செய்வதால் வேல் தனிச் சிறப் புடையதாயிற்று. அவ் வேலைக் கைப்பற்றியதால், வேலேந்திய கரம் போற்றப் பெற்றது. எனவேதான் "வேலே விளங்குகை யான்" என்றனர். முன் எப்பகையை வென்றாலும் எமவாதையை வெல்வது எவர்க்கும் அரிதான ஒன்று. முருகப் பெருமானது வேலணிந்த திருக்கரத்தை நம்பியவர்கள், எமவாதனைக்கு அஞ்ச வேண்டா. திருக்கடவூரில் மார்க்கண்டரைக் காலன் பற்றவந்தபோது, தந்தையான சிவன் காலால் உதைத்துக் கொன்றான். அவன் மைந்தனான முருகன் தன் கைவேலாற் கொன்று நம்பியவரைக் காப்பான் என்ற திடமான கருத்தை உட்கொண்டு, தனக்கு மட்டும் துணையென்று கூறாமல், "நமக்கு" என்று தன்னைச் சூழ்ந்துள்ள அன்பர்கட்கெல்லாம் தானே துணையாய்க் கூறிய கருணை அருணகிரிநாதரிடமிருந்ததை யறிகின்றோம். "கருணைக் கருணகிரி" என்று பாடினர் புலவர்.

இந்த அரிய கருத்தை மனத்துட் கொண்ட தண்டபாணி யடிகள், 'முருகானந்த லகிரி' என்று சந்தப் பாடலால் பாடிய நூலொன்றில், ஒரு கவியில் தம் நெஞ்சுக் கறிவுறுத்திய முறையிற் பாடியதைக் காணலாம்.

நெஞ்சமே! நீல நிறமான (பசுமையுள்ளிட்ட) தோகையினைக் கொண்ட குதிரை போன்றுள்ளது மயில் வாகனம். அதில் வந்து காட்சி தருகின்ற முருகவேளது, வேலேந்திய திருக்

கரமே நமக்கு உற்ற துணையாகும், என்று நம்பிப் பணிகின் றிலையே, நிலையற்ற உலக வாழ்வினையே கருதி அல்லும் பகலும் அலைகின்றனையே, இறுதியில் எமன் பட்டிக்கடாவில் வருவானே, என்ன செய்வாய், "தண்டாயுதமும் திரிசூலமும் விழத்தாக்கி உன்னைத் திண்டாட வெட்டி விழவிடுவேன்" என்று உன்னால் வீரங் கூற முடியுமா? முடியாதே. முடியுமென்கின்றனர் அருணகிரிநாதர். எப்படி ?

சூலத்தைக் கையிலேந்தி, பாசக் கயிற்றைவீசி, ஒவ்வொரு பிறவிதோறும் தொடர்ந்து வருகின்றான் காலன். அவனுக்குச் சிறிதும் எந்தக் காலத்தினும் அஞ்சேன், ஏனென்றால், திருப் பாற்கடலில் தோன்றிய ஆலகால விடத்தைத் தான் உண்டு, தேவர்களை வாழ வைத்த கருணையுள்ள சிவபிரானின் இளைய குமாரக் கடவுள் ஆறு திருமுகங் கொண்டு அன்பர்கட்கு ஆறு தலையளிப்பவன், அவன் திருக்கையில் வேற்படையிருக்கின்றது. எமன் வருவானேயானால், அந்தத்திருக்கரம் வாளா இராது. வேலையேவி, அவன் வந்த வேலையைச் செய்யவிடாமல் கொன்று காக்கும். அது நமக்கு என்றும் உண்மையான துணை என்று கூறினரே. அதைச் சற்றே சிந்திப்பாயாக என்றனர் அடிகள்.

அவ்வாறு கூறிய அருணகிரிநாதர் எத்தகையரெனில், 1008 அண்டங்களை, 108 யுகம் அரசு புரிந்த வீரதீரரான சூரர் களை வெல்ல ஏவினர் தம் சக்கரப்படையைத் திருமால். அது வெல்ல முடியாமல் அவர்களிடமே தங்கியது. திருமால் மிக அஞ்சி, அவர்கள் மடியும் வரை சக்கரப் படையின்றியிருந்தார். பின் முருகப் பெருமான் வந்து அசுரர்களைக் கொன்று, அவர் களாலழிக்கப்பட்ட பொன்னுலகைப் பழைய நிலையில், வாழ வைத்து இந்திரனை அரசனாக்கினர். அத்தகைய தேவேந்திரன் பதிக்குக் கிளி வடிவிற்போய் அங்குள்ள பல இன்பங்களைக் கண்டு மயங்காமல், பாரிசாதமலரொன்றைப பெற்றுப் பூவுலகுக்கு வந்த பெருமான் அருணகிரிநாதர். அவர் தாமே "வேலும் திருக்கையும் உண்டு. அது நமக்கு மெய்த்துணை காலன்றனக்கு ஒரு காலும் அஞ்சேன்" என்றார். எனவே, அவர் கூறிய அருளு ரையை நம்பி, முருகன் வேலேந்திய திருக்கரத்தைத் துணை யாகக் கொள்வாயாக! என்று தம் நெஞ்சுக்குக் கூறிய முறையில் நமக்கெல்லாம் கூறிய அருளுரையாகக் கொள்ள வேண்டும் என்பர் தண்டபாணியடிகள்.

அந்தப் பாடல் எது என்றறிய மனம் அவாவுகின்ற தல்லவா!

தானந்த தானந்த தானந்த தானந்த தானந்தன

நிலங்கு லாபங்கொள் மாவின்கண் நேர்கந்தவேள்
வேலங்கை யேகஞ்சம் ஆமென்றி ராநெஞ்ச மே!முந்துநாள்
மாலஞ்சு சூர்பொன்ற லால்உய்ந்த ஊர்கண்டு வாழ்உம்பர்கோ
னுலங்கொர் பூவும்பெ ருவந்த நாதன்சொல் ஆய்நன்கரோ.

கலாபம்-தோகை, மா-குதிரை. மயிலைக் குதிரையாயும் அருணகிரிநாதர் கூறுவர். "பட்சிதுரங்க" பட்சி பறவை (மயில்) துரங்க-குதிரையுடையவனே" என்பதாம். "கலபத்து ஏர்மா" என்பர். கலபத்து - தோகையுள்ள, ஏர்மா-அழகிய குதிரை. அதைக் கொண்டு இப் பாடலில், 'கலாபங்கொள்மா" என்றனர் அடிகள். உய்ந்தவூர்-தேவலோகம். பூ-பாரிசாதமலர், பெரு-பெற்று, நாதன்-அருணகிரிநாதர், ஆய்-நன்கு யோசித்துப்பார்ப்பாயாக! என்பதாம்.

மேலும், "அருணகிரி கவியாவும் அணிகுவான்" என்றும் 'அருணையினூடுதித்த - துணையுடலானொருத்தன், ஓதுசந்தத் திருப்புகழான மதாணி துன்றிச் சிறப்புறு மார்பினன்" என முருகன்மீது பாடுகின்றனர். துணையுடலான்-இரண்டு உடலுள்ளவர் அருணகிரிநாதர். மனித உடம்பு ஒன்று. பின் கிளியான உடம்பு ஒன்று என இரண்டென்பதாம்.

அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் போலவே, தண்டபாணி அடிகளும் திருப்புகழ்ப் பாடல் நூற்றுக்கணக்கிற் பாடினர். எனவே இவரையும் புலவர், திருப்புகழ்ச் சுவாமிகள் என்று கூறிப் பாராட்டினர். அடிகள் திருச்செந்தூருக்குப் பாடிய நூல் "கௌமார விசயம்" என்பதொன்று. அதில் அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ்க் கவிகட்கும், தாம் பாடியுள்ள திருப்புகழ்க் கவிகட்கும் உள்ள தகுதியை வெளிப்படுத்திப் பணிவு காட்டு முறையிற் பாடிய கவிகளைச் செவிகளாற் கேட்டருள்வஃயாக என்று முருகனை வேண்டுகின்றனர்.

பருப்பதத் தெதிர்ஒரு பருக்கைக்கல் உறுவதில்,
பரிதியெதிர் ஒருமின்மினிப்
பறவையுற லிற்பரவை நீர்க்கெதிரில் ஆன்அடி
பதிந்தகுழி நீர்நிற்றலில்
மருப்பொலி செழுங்கமல மலரினெதிர் நெய்தலும்
மலர்ந்திடலில் மும்மதத்து
வாரணத் தெதிர்ஏனம் ஆரவா ரம்செயலில்
மயிலெதிரில் வான்கோழியும்
விருப்புடன்க டித்திடலில் விதுவினெ திரிற்குலவும்
வெண்சங்க மணியில் அருணை
மேவியகி ளிப்புலவன் ஓதியதி ருப்புகழின்
வியனெண்ணி வெட்குறுமல்

திருப்புகழே னச்சிறிய னேனும்பி தற்றலைச்
செவிகொண்டு வினவியருளே
செம்பொன்மதில் சூழ்திருச் செந்தில்எந் தாய்உனது
செவிகொண்டு வினவியருளே.

இவ்வாறு அருணகிரிநாதர் திருப்புகழைப் பாராட்டுகின்றனர். அத்தகைய திருப்புகழ் ஆதிய அருந்தமிழ்ப் பாக்களை அவமதிப்பவர்களை உறவாக மதிக்க மாட்டேன் என்றும் கூறுகின்றனர்.

"கிளிசெப்பு பனுவலை இகழுமடையரை
உறவிற் கருதாதே"

என்று கூறியதை நோக்க, அடிகள் அருணகிரிநாதர்மீது கொண்டுள்ள பற்றினைக் காண்கின்றோம்.

திருப்புகழ்க் கவிகளை முதலாவதாகப் பாடியவர் அருணகிரிநாதர். அவர் முறையைப் பற்றிப் பாடியவர் வண்ணச் சரபம், தண்டபாணி அடிகள். எனவே இவரும் திருப்புகழார் என வழங்கலாயினர். இதை வியந்து பழைய-புதிய என்ற அடைமொழி கொடுத்து, திருநெல்வேலியை யடுத்த, தச்சனல்லூர் அழகிய சொக்கநாத பிள்ளையென்பவர் கூறிய கவி இனிமை தருவதாகும். மேலும், அருணகிரிநாதரது மறுபிறப்பு என்றது தண்டபாணியடிகளை, முருகப்பெருமான் கூறிய அனுபவவுரை. அருணகிரிநாதர் அமிசமென்பதற்கும், திருப்புகழ் பாடியதற்கும் பொருந்த, பழைய திருப்புகழ்க்காரன் வரலாற்றைப் பாடிய தண்டபாணியடிகள், புதிய திருப்புகழ்க்காரன் என்கின்றனர்.

தண்டபாணியடிகளின் உடற்றந்தை செந்திநாயகம் பிள்ளை. அருணகிரிநாதரின் உயிர்த் தந்தை செந்திநாயகனான முருகன். இப்படி ஒரு பொருத்தமும்அமைத்துள்ளனர் பிள்ளையவர்கள்.

சீதையிற் பணில மணிதிகழ் பணிலம்
சிறந்ததென் னருணையிற் செப்பும்
ஓதைசால் பழைய திருப்புகழ்க் காரன்
உயரருட் குமரனால் உய்ந்த
காதையைப் புதிய திருப்புகழ்க் காரன்
கழறிய வுண்மையைக் காண்போர்
தாதையாம் செந்தி நாயகன் பெருமை
தன்னினைந் துருகல்கிச் சயமே.

என்பதாம். எனவேதான் இக்கட்டுரையின் தலைப்பைத் திருப்புகழ் முனிவர் பாராட்டும் திருப்புகழ் முனிவரென்றமைக்கலானேன். இதனால் திருப்புகழ் முனிவர் தண்டபாணியடிகள் என்பதும், அவர் பாராட்டிய திருப்புகழ் முனிவர் அருணகிரிநாதர் என்பதும் ஆகும்.

(தொடரும்)

மழை வேண்டல் பதிகம்

[தவயோகி சுத்தானந்த பாரதியார்]

வான்மழை வழாது பெய்க
    வையகம் வளமை எய்க
தேன்கவிப் புலவர் வாழ்க!
    செந்தமிழ்க் கலைகள் வாழ்க!
கான்மலர் கனிகொ ழிக்க
    கண்குளிர் பசுமை சூழ்க!
ஊனுயிர் மகிழ நாளும்
    ஓங்குக திருக்க ளெல்லாம். க

வேறு

['கற்றாங் கெரியோம்பி' என்ற தேவாரம் போல்]

தேனார்மழை பொழிவாய்
    தெய்வத்திரு வருளே
ஊனார் உயிர்வாழ
    உழவுத்தொழி லோங்க
கோனார்குழல் கேட்டுக்
    கோக்கள் பால்சொரிய
வானார் கருமுகிலே
    வழுவாமழை பொழிவாய். உ

நீராய் நெக்குருகி
    நெஞ்சம் கரைந்தோடக்
காரார் மழைவானே
    கைகூப்பித் தொழுதோம்
பாரார் திருக்கோயில்
    பசும்பொன் னகைசொக்க
வாராய் வளந்தாராய்
    வானத் தமுதானாய். ங

கல்விப் பயனெய்தக்
    கலைகள் மிகவோங்கச்
செல்வத் தொழிலோங்கத்
    தேசப் புகழோங்க
இல்லை என்னாதே
    ஈகைத் திறனோங்க
நல்லமழை பொழிவாய்
    ஞாலப் பெருமானே! ச

துய்யர் தவமோங்க
தூய்க்கும் பொருள்மல்க
தெய்வக் கோயில்வளர்
திருநாட்கள் பொலிய
சைவப் பயிரோங்கத்
தமிழர் கலையோங்கப்
பெய்வான் முகிலேநீ
பெம்மா னருளாலே!

வேறு

['அருட்சோதி தெய்வம் என்னை ஆண்டுகொண்ட தெய்வம்'
போல் பாடுக]

விண்ணமுதே உயிர்க்குயிராய்
விளையாடும் அமுதே
பெண்ணமுதாய்ச் சேய்வளர்க்கும்
பிரியமுள்ள பரிவே
கண்ணமுதே பண்ணமுதே
கலையமுதே இன்பக்
கடலமுதே காரமுதே
கைகுவித்தோம் உனக்கே
மண்ணமுத விளைவேற
மாதவங்கள் செழிக்க
மழைபொழிவாய் மழைபொழிவாய்
நல்லமழை பொழிவாய்.

பயிர்வேகப் புல்லின்றிப்
பசுமெலிந் தேவேக
பருகிடநீர் இன்றியிந்தப்
பாழுநிலத் தினிலே
உயிர்வேக மனம்வேக
உணர்புலனும் வேக
உடல்வெந்தே புண்ணாகக்
குடல் வெந்தேகுழைய
துயர்வேகும் கண்ணீரும்
துன்பத்தால் வேக
தொல்லைகளைத் தாங்ககில்லோம்
நல்லமழை பொழிவாய்.

செயலூக்கும் மின்சாரத்
திறமைமிகக் குறையத்
தேயத்தே தொழில்வளமை
தேய்ந்துமிடி கௌவ

அயலரக்கர் போர்முறுக்கி
அமர்க்களங்கள் செய்ய
அன்னமின்றி இந்நாட்டார்
இன்னலுற்றே மெலிவார்
தயவான தண்ணருளே
தஞ்சமுனை யடைந்தோம்
தருணமழை பொழிந்திடுவாய்
வருணபக வானே. ௮

பருவமழை தவறிவிட்டால்
பம்படித்தும் என்னே
பச்சைவள மின்றியிங்கே
பஞ்சத்தால் வாடி
தருமமிகு வேளாண்மை
தாள்ாண்மை தவறித்
தட்டழிந்து மாந்தரிங்கே
தரங்கெடுத லாமோ
கருமுகிலாய் மின்னொளியாய்க்
கடகடக்கும் இடியாய்க்
காரமுதே வாராயோ
பாரமுதம் பெறவே! ௯

வேறு

[ஸ்ரீராகம்-ஆதிதாளம்]

கவிமழை பொழிந்தது கடகடகட வெனக்
கார்மழை பொழிந்ததம்மா
நவரசநாடக வுலகுயிர் வாழ்வு
நலம்பெற நடந்ததம்மா
தவவினை தழைத்தது சக்தி பிறந்தது
சத்தியம் வென்றதம்மா
சிவமொளிர் சிந்தையும் திறமொளிர் செய்கையும்
திருவொளிர் கின்றனவே. ௰

புண்ணிய பாரதம் புதுமலர்ச் சியுடனே
புன்னகை பூத்ததம்மா
எண்ணிய எண்ணியாங் கெய்திடத் திண்ணிய
எண்ணமு யர்ந்ததம்மா!
பண்ணிய நல்வினை பாரெல்லாம் பயனுறப்
பழுத்தது மழைவளத்தால்
விண்முகிலே வணக்கம் வணக்கம் வணக்கம்
விரிவானமுதே வணக்கம்! ௧௧

மா இறைவன் மாண்பு அலவோ?

[புலவர் கோ. வே. பெருமாள், M.A. B.T. நெல்லை.

1. தென்குமரி முனை

கன்னிக் குமரிக் கடற்கரையில்
கனியும் இயற்கை யழகினிலே
மன்னித் தோய்ந்தே மகிழாதார்,
மனமே இல்லா அரக்கராவார்!
பன்னிப் பகலோன் மாலையிலே,
பரந்த மேற்குக் கடல்மூழ்க,
துன்னிக் கீழ்கடல் முழுநிலவே
துவளுந் தட்டாய்த் தோன்றியதே! 1

குழைத்தே அழகைக் குவிக்கின்ற
குளிருந் திங்கள் வெண்ணிலவே!
உழைத்துப் பெற்ற உயர்பொருளை
உவந்தே ஈயும் மேலோர்போல்,
தழைத்தே எரிக்கும் தணல்வெயிலை
தானே யேற்று நிலவாக்கி,
நுழைத்தே நிலத்தில் ஒளி பரப்பும்
நுட்பம் எமக்கு நுவல்வாயே! 2

உரிமை விரும்பும் அமெரிக்கர்
ஊக்கி அப்பலோ ஆய்ந்துவந்தார்;
மருவும் வான ஆராய்ச்சி
மயக்கம் தெளியாப் பெருமுயற்சி!
அருமைக் குழந்தை அழுகையினை
அகற்ற விரும்பும் அன்புத்தாய்,
பெருமை தவழும் அம்புலியே!
பேசி உன்னை அழைப்பதேனோ? 3

நடுநிலை நாடும் நல்லுள்ளம்
நயக்கும் கீழ்மேல் கதிர்கண்டேன்;
கடுநிலைக் கதிரோன் ஒருநொடியில்
கடந்தான், மேலைக் கடல்மூழ்கி!
கொடுநிலை வெம்மை நீங்கியபின்,
குலவும் தண்மை இயல்பென்பார்;
எடுநிலை ஊர்தி வெண்ணிலவு
எழுந்தே வானில் வயங்கியதே! 4

(தொடரும்)

குறிப்பு: *திருநெல்வேலி AIR இல் 6-4-75 இரவு மணி 8-5 முதல் 8-10 வரை ஒலிபரப்பப் பெற்ற வானொலி நிகழ்ச்சி:* "என் கவிதை"

மறைமலையடிகள் நூல்நிலைய வளர்ச்சிக்குப் பொதுநூலக இயக்குநர் பரிந்துரைத்தல்

தமிழக அரசு பாடநூல்களை வெளியிடுவதால் கழகப் புத்தக விற்பனை குறைந்து அதனால் வருவாய் குறையவே, மறைமலை யடிகள் நூல்நிலையத்துக்குத் தமிழக அரசிடம் பொருளுதவி கேட்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

1972-73க்கே தணிக்கையாளர் சான்றிதழுடன் மறைமலை யடிகள் நூல் நிலையத்தின் செலவு கணக்கினைத் தமிழக அரசுக்கு அனுப்பிப் பொருளுதவி கேட்டு எழுதினோம். அது பற்றிப் பலமுறை பொது நூலக இயக்குநர் திரு வே. தில்லை நாயகம் அவர்களை யான் மட்டும் தனியேயும், பொது மேலாளருடன் சிலமுறையும், நூலகருடன் சிலமுறையும் கண்டு பேசினேன்.

டாக்டர் சாமிநாதையர் நூல்நிலையத்துக்கு எந்த அடிப் படையில் பொருளுதவி செய்யப்படுகிறதென்ற விவரம் கேட்டனர். அதற்குரிய குறிப்புகளையெல்லாம் பெற்றுப் பொது நூலக இயக்குநரவர்களிடம் கொடுத்தேன்.

அப்படியிருந்தும் அந்த ஆண்டிற்கு ரூ. 90/-கொடுக்கலா மென்றும், அடுத்த ஆண்டிற்கு ரூ. 400/-கொடுக்கலாமென்றும் அதற்கு அடுத்த ஆண்டிற்கு ரூ. 1000/- கொடுக்கலாமென்றும் பொது நூலக இயக்குநர் தமிழகக் கல்வித்துறைச் செயலர் அவர்கட்குப் பரிந்துரைத்து எழுதியுள்ளார்களெனக் கேள்விப் பட்டேன். பொது நூலக இயக்குநர் எந்த அடிப்படையில் ரூ. 90/-ம் ரூ. 400/-ம் ரூ. 1000/-மும் பரிந்துரைத்தார்கள் என்பது விளங்கவில்லை.

பொது நூலக இயக்குநர் அவர்களின் நேர்மையற்ற மனப் பான்மையினை அறிந்து மத்திய அரசுக்கு மறைமலையடிகள் நூல் நிலையத்துக்குப் புத்தகம் வாங்குவதற்குப் பொருளுதவி கேட்டு மறைமலையடிகள் நூல்நிலையச் செயலர் அனுப்பிய விண்ணப் பத்தின்மீது தமிழக அரசுக் கல்வித் துறைச் செயலர் அவர்களே பரிந்துரை செய்து மறைமலையடிகள் நூல்நிலையத்துக்குப் புத்தகங்கள் வாங்குவதற்கும் புத்தகங்களைக் கட்டடஞ் செய் வதற்குமாக ரூ. 3000/- வாங்கித் தந்தனர். அந்த விண்ணப்பம் பொது நூலக இயக்குநரவர்களிடம் போயிருக்குமாயின் அதற்கும் உதவி பெற்றிருக்க முடியாது என்பது உறுதி. 2—12—1965இல் மாண்புமிகு டாக்டர் கலைஞர் முதலமைச்சர் அவர்களோடு மறைமலையடிகள் நூல்நிலையத்தைப் பார்வை

யிட்டு வழங்கிய பாராட்டுரையில் "நூல்நிலையம் மேன்மேலும் வளர்ந்து அழியாப் புகழோடு என்றென்றும் நிலைபெற்று நிற்கத் தக்க வகையில் அரசினரின் அரவணைப்பும் உதவியும் என்றென்றும் இருக்கவேண்டும்" என்று எழுதியிருப்பதை நினைவு கூர்ந்து,

இப்போது மாண்புமிகு டாக்டர் நாவலர் கல்வி அமைச்சரவர்கள் 1975-76க்கு ரூபா பதினாயிரம் (ரூ 10,000/-) பொருளுதவி செய்வதற்கு ஆணையிட்டிருப்பதாகச் சொல்லி மகிழ்ச்சியூட்டினார்கள். அதற்குரிய கட்டளைப் படியும் பொது நூலக இயக்குநரவர்களிடமிருந்து இந்நாள்வரை கிடைக்கப்பெறவில்லை.


நமது மதிப்புக்குரிய தமிழக அரசு சைதாப்பேட்டை மறைமலை பாலத்துக்கும், பல்லாவரம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கும் மறைமலையடிகள் திருப்பெயரைச் சூட்டியுள்ளது, மேலும் அடிகள் பெயரில் புதுநகர் ஒன்று அமைப்பதும், அடிகளார் வாழ்ந்த வீடு கலைமன்றமாக இருப்பதும் அதனைச் சுற்றுலாத்துறையினர் கவின்காட்சிக் கூடங்களில் ஒன்றாக ஏற்றுக் கொண்டதும் பொதுமக்கள் யாவரும் அறிவர்.

1972-73, 1973-74, 1974-75 ஆகிய மூன்று ஆண்டுகட்கும் மறைமலையடிகள் நூல்நிலையத்துக்குப் பொது நூலக இயக்குநர் அவர்களின் பொருந்தா உள்ளப்பான்மையின் காரணமாகப் பொருளுதவி கிடைக்கப்பெறவில்லை என்பதை நூலகத்தைப் பயன்படுத்தும் பொதுமக்களுக்கும், அறிஞர்கட்கும், ஆராய்ச்சியாளர்கட்கும் மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நூல்நிலையத்திலுள்ள மிகப் பழைமையான நூல்களைக் காப்பதற்கும், அவற்றிற் சிலவற்றை 'மைக்ரோ பிலிம்' எடுப்பதற்கும் பெரும்பொருள் தேவை. மேலும் நூல்நிலையத்தை நடத்துவதற்கு ஆண்டுதோறும் ரூ. 40.000/-க்குமேல் செலவாகின்றமையால் ஆண்டுதோறும் ஏற்படுகின்ற மொத்தச் செலவில் நேர்பாதித் தொகையினையாவது தமிழகவரசு வழங்குவது முறைமையோடு கூடிய கடமையாகும் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்று திருக்குறள் அரசியலில் குறிக்கப்பெற்றுள்ள திருவள்ளுவர் பொய்யாமொழியினை இங்கே நினைவுபடுத்துவது மிகையாகாது என்று கருதுகின்றேன்.



Thiru C. G. Rangabashyam, I. A. S. Madras,
Secretary to Govt. Education Dept. 19—4—1975
Government of Tamil Nadu.

It is indeed a privilege to have had an opportunity to visit this library which treasures several rare works in Tamil. The collections of the various books of Maraimalai Adigalar, particularly those in English are worth seeing. The commendable efforts put in by Thiru. Subbiah Pillai deserve all praise. It is my prayer that this treasure-house of Tamil literature should be preserved and fostered by the public as well as by the Government by means of liberal assistance to enable its modernisation and consequent increased utility by scholars as well as layman.

தமிழில் பல்வகைப்பட்ட அரிய நூல்களைத் தன் அருஞ் செல்வமாகக் காத்துவரும் இந் நூலகத்தைப் பார்வையிடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தமையைப் பெரும் பேறாகவே கருதுகிறேன். மறைமலையடிகளாரின் பல்வேறு நூல் தொகுப்புகள் குறிப்பாக ஆங்கில நூல்கள் பார்ப்பதற்கு அரிய மதிப்புடையவை. திரு. சுப்பையாபிள்ளை எடுத்துக்கொண்டுள்ள பெரிதும் போற்றுதற்குரிய முயற்சிகள் பாராட்டத்தக்கன. தமிழ் இலக்கியத்தின் அருஞ்செல்வக் கருவூலம் தற்காலத்துக்கேற்ற புதிய முறைகளில் முன்னேற்றமடைய அதன் விளைவாய் மென்மேலும் கற்றவரும் மற்றவரும் கூடுதலாகப் பயன்படுத்தத் தக்க வகையில் அரசாலும் பொது மக்களாலும் தாராளமான நிதி உதவியின்வழிப் போற்றிப் பாதுக்காக்கப்பெறுதல் வேண்டும் என்பது எனது வேண்டுகோள்.

வறட்சி நிலை

'நீர் இன்றி அமையாது உலகு' என்றார் வள்ளுவப் பெருந்தகை. இப்பொய்யாமொழியின் பொருளை ஏட்டளவில் மட்டுமின்றி நாட்டளவில் காணுகின்ற அவல நிலைக்கு ஆட்பட்டிருக்கிறது இன்றைய தமிழகம்.

மாரி பொய்ப்பதும் அதனால் விளைச்சல் குறைவதும் இவ்விரண்டாலும் வறட்சி நிலை அவ்வப்போது ஏற்படுவதும் இயல்பே. இதற்கு நம் சங்க நூல்களே சான்று பகர்கின்றன. ஆனால், தற்போது தமிழகத்தில் ஏற்பட்டிருக்கின்ற வறட்சி நிலை இதுகாறும் தமிழகம் காணாத ஒன்று என்றால் அது மிகையாகாது.

மாரி பொய்த்து விளைச்சல் குறைந்தமையால் அரிசிப் பஞ்சம் ஏற்பட்டு, அது காரணமாக விலை ஏற்றம் கட்டுக்கடங்கா நிலை, கடந்த ஓராண்டுக் காலமாக இருந்து வருவதும் நாம் அறிந்ததே. ஆனால், உண்ணு நீர்க்கே பஞ்சம் வந்து மக்கள் அல்லற்படும் நிலை அண்மைக் காலமாக மிக மிக அஞ்சத்தக்கதாக இருக்கிறது. உணவின்மையைவிடக் கொடியது நீர் இன்மை. எனவேதான் நீர் இன்றி அமையாமல் மக்கள் நீருக்கு அலைந்து திரியும் காட்சியினைச் சென்னைத் தெருக்களில் காண்கிறோம்.

இத்தகைய நிலையைச் சீர்படுத்த அரசினரும் சமயப் பெரியார்களும் பெரிதும் முயன்று வருகின்றனர். ஆங்காங்கே கிணறுகள் தோண்டப் பட்டுள்ளன. குழாய்க்கிணறுகள் என்று சில அமைக்கப்படுகின்றன. தெருக்கள்தோறும் நீர் உறிஞ்சிகள் அமைக்கப்பட்டுள்ளன.

கோவில்களும், அறநிலையங்களும், நம் கழகமும் மழை வேண்டி வழிபாடுகள் நிகழ்த்தி வருகின்றன. இதனால் ஓரளவு பயனும் கிட்டியுள்ளது. தென்னாட்டில் ஆங்காங்கே விசும்பின் துளிகள் விழத் தொடங்கியுள்ளன.

செயற்கை முறையால் கிணறுகள் மூலமும் குழாய்கள் மூலமும் நிலத்தின் ஆழத்தினின்று சுரண்ட வேண்டிய அளவுக்கு நீரைச் சுரண்டி விட்டோம். கிணறுகள்கூட வறண்டு விட்டன. மழை பெய்து, அதனை நிலம் ஏற்று, அதனால் ஊற்று நீர் மிகுந்தாலன்றோ இறைப்பதற்கு நீர் கிடைக்கும்? இன்று அந்த ஊற்று நீருக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுவிட்ட நிலையினைத்தான் வறட்சி நிலை என்கிறோம்.

இந்நிலைக்குக் காரணம் யார்? எது? என்ற ஆராய்ச்சிகளில் இப்போது நாம் இறங்கிப் பயனில்லை. தற்போதைய நிலைமையைச் சீர்படுத்தத் திட்டமிட்டு வேலை செய்வது மட்டும் போதாது. கோள் நிலை திரிந்து கோடை நீடிடும் நிலை காலப்போக்கில் இனியும் நேரக்கூடியதே. எனவே, இதற்கு நிலையான ஒரு தீர்வு காண, புதிய திட்டங்கள் வகுக்கப் படல் வேண்டும். இடர்க்கால நிலைகளைச் சீர்செய்ய எத்தனையோ திட்டங்களை வகுக்கும் அரசாங்கம், இத்தகைய வறட்சி நிலைகளைச் சீர்படுத்தவும் நிலையான திட்டங்கள் திட்டதிட்டங்கள் வகுக்க வேண்டும். இதில் கட்சி வேறுபாடுகள் சமய வேறுபாடுகள் பாராமல் பல்துறை அறிஞர்களையும் கொண்ட ஒரு குழு அமைத்திடல்வேண்டும்.

ஓதுவார்கள் ஓதட்டும்; அறநிலையங்கள் வழிபாடுகளை நடத்தட்டும்; அறிவியலாளர்கள் சிந்திக்கட்டும்; அன்பர்கள் தம்மாலானவற்றைச் செய்யட்டும்; வளமுடையோர் வறட்சி நிலை நீக்கும் பணிக்கு வாரி வழங்கட்டும். வறட்சி நீங்கட்டும். வளம் பெருகட்டும்.

டாக்டர் கலைஞரின் 52 ஆவது பிறந்தநாள் விழா

தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களின் 52ஆவது பிறந்தநாள் விழா 3-6-75 இல் நாடெங்கும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.



தம்முடைய பிறந்தநாள் விழாக்களில் ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு பொது நலத்திட்டத்தினைச் செயல்படுத்தும் கலைஞர் அவர்கள் இதுகாறும் பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம், கண்ணொளி வழங்கும் திட்டம், சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டம், ஊனமுற்றோர்க்கு உதவும் திட்டம் எனப் பல திட்டங்களை வகுத்துள்ளார் என்பது யாவரும் அறிந்ததே.

அம் முறையில், இப் பிறந்தநாள் விழாவில் திக்கற்ற சிறுர்க்கு வாழ்வளிக்கும் வகையில் 52 கருணை இல்லங்களை அமைக்கத் திட்டமிட்டார். இத் திட்டப்படி அண்மையில் திருமயிலையில் கபாலீசுவரர் கோயில் சார்பில் முதல் கருணை இல்லம் அமைக்கப்பட்டு அது, 3-6-75 அன்று கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது.

இதனையொட்டி நடைபெற்ற விழாவில் அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு கண்ணப்பர் தலைமை தாங்கினர். முரசொலி மாறன், எம். பி., அரங்கண்ணல் எம். எல். ஏ., திருமுருக கிருபானந்தவாரியார், தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

திருமுருக கிருபானந்தவாரியார் இக் கருணை இல்லத்தைப் பற்றியும் இதனை அமைத்த கலைஞர் கருணாநிதியையும் பொருத்தங்கள் பல காட்டிப் பாராட்டுரை வழங்கினர்.

அடுத்துத் தவத்திரு குன்றக்குடி அடிகளார் பேசுகையில் தமிழகத்தின் வரலாறு திரும்புகிறது என்றும், கோயில்களைச் சார்ந்த குடிகள்-குடிகளைச் சார்ந்த கோயில்கள் என்ற நிலை வளர வேண்டும் என்றும், இத்துறையில் கலைஞர் புதிய மாற்றங்களைச் செய்யவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

கலைஞரின் கருணை இல்லப் பணி பாராட்டற்குரியதே. ஆனால், அஃது 52 என்ற அளவில் நின்று விடுதல் கூடாது. இந் நாட்டில் திக்கற்ற குழந்தைகள் ஆயிரக்கணக்கில் உள்ளனர். அப்படிப்பட்ட சிறுவர்களைச் சீரிய மனிதர்களாகச் செய்ய நூற்றுக்கணக்கான கருணை இல்லங்கள் தேவை. எனவே, கலைஞர் தம்முடைய கருணைப் பணிகள் என்றும் தொடருமாறு செய்தல் வேண்டும்.

பிறந்த நாள் விழாவைத் தொடர்ந்து 8-6-'75 ஞாயிறு காலை, மாலை கலைவாணர் அரங்கில் கருத்தரங்கமும், கவியரங்கமும் நடைபெற்றன.

கலைஞர் அவர்கள் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து பல நற்பணிகளைச் செய்ய இறைவன் அருள்புரிவானாக.

மொழியியல் கோடைப் பயிற்சி நிறைவு விழா (7-6-75)



பல்கலைக் கழகத் துணைவேந்தர் தலைமையுரை நிகழ்த்துதல்



மறைமலையடிகளார் நூல் நிலையத்தில்
மொழியாராய்ச்சி செய்த மொழியியல் அறிஞர்கள்,
செயலாளருடன் காணப்படுதல்.

மொழி இயல் கோடைப்பயிற்சி நிலையம்

சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறை நடத்திய மொழி இயல் கோடைப்பயிற்சி நிலையம் மே 12 முதல் சூன் 7 வரை நடைபெற்றது. இதனை நடத்துவதற்குப் பல்கலைக் கழக மானியக்குழு பொருளுதவி செய்ய மைசூர் இந்திய மொழிகள் மைய நிலையமும் இந்திய மொழி இயல் கழகமும் துணைநிற்க இப் பயிற்சி நிலையம் சிறப்பாக நடைபெற்றது. இதன் விடையாற்று விழா, சூன் 7ஆம் நாளன்று சென்னை அசோகா உணவு விடுதியில் சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் தாமரைத்திரு நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மைசூர் இந்திய மொழிகள் மைய நிலையத்தின் துணை இயக்குநரும் கோடைப் பயிற்சி நிலையத்தின் ஆசிரியருமான டாக்டர் இ. அண்ணாமலை அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில் சென்னைப் பல்கலைக் கழகம் அதன் வரலாற்றிலேயே முதன் முறையாக மொழி இயல் கோடைப் பயிற்சி நிலையத்தை நடத்த முன்வந்ததற்காகப் பாராட்டினார். பயிற்சி சிறப்பாக நடந்து முடிந்ததற்கு அதன் இயக்குநராகத் திகழ்ந்த டாகடர் ந. சஞ்சீவி அவர்களின் பேரூக்கமும் பிற ஆசிரியர்கள் காட்டிய ஒத்துழைப்பும் பயின்ற பேராசிரியர்களின் ஆர்வமும்தான் காரணமென்றார்.

நிலையத்தின் அறிக்கையை இயக்குநர் டாக்டர். ந. சஞ்சீவி படித்தார். இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் காசுமீரத்திலிருந்து பாளையங்கோட்டை வரையிலும் அண்டை நாடான பங்களா தேசத்திலிருந்துமாக 42 மொழியாசிரியர்கள் கோடைப் பயிற்சி நிலையத்தில் பங்கு கொண்டனரென்றும் அனைவரும் தேர்வுகளை முறையாக எழுதித் தகுதி பெற்றுள்ளனரென்றும் குறிப்பிட்டார்.

விழாத் தலைவரான தாமரைத்திரு. நெ து. சுந்தரவடிவேலு அவர்கள் வறட்சி, வெயிற் கொடுமை போன்ற பல இடையூறுகளையும் பொருட்படுத்தாது சிறப்பாக மொழி இயல் கோடைப் பயிற்சி நிலையத்தைச் சிறப்பாக நடத்தியதற்காக டாக்டர். ந. சஞ்சீவியைப் பாராட்டினார்.

குறிப்பாகத் தேர்வுகளை நடத்தியமைக்காகப் பாராட்டுகையில் எந்தத் துறையில் வேண்டுமாயினும் புரட்சி இடம் பெறலாம். ஆனல், கல்வித் துறையில் புரட்சிக்கே இடமில்லை என்றார். பல்வேறு சிக்கல்கள் சூழ்ந்துள்ள வாழ்க்கை வாழும் நாம் அதில் ஏற்படும் அறை கூவல்களை எதிர்த்துப் போராடச் சிறுசிறு சோதனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றார். தேர்வு முறையை அடியோடு ஒழிக்க வேண்டுமென்பது தேவையில்லாதது என்றார்.

விழாவில் நிறைவுச் சொற்பொழிவாற்ற விருந்த தமிழக ஆளுநர் மேதகு கே கே ஷா அவர்கள் வர இயலாத நிலையில் அவர்தம் உரையைத் துணை வேந்தர் அவர்கள் படித்தார்.

மொழி இயல் ஆராய்ச்சி மொழிப் பாடங்களைப் பயிற்றுவிப்பதற்குப் பெருந்துணையாயிருக்குமென்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

உலகின் வேறு எந்த இரண்டு மொழிகளுக்கும் இடையே இல்லாத ஒற்றுமை தமிழ், சமசுகிருதத்துக் கிடையே இருக்கிறது. இரண்டு மொழிகளிலுமுள்ள எழுத்துகள் ஒற்றுமையாக உள்ளன. எனவே தமிழ் மொழியிலிருந்துதான் சமசுகிருதம் தோன்றியிருக்க வேண்டுமென்று ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருந்தார்.

மொழி இயல் பயின்ற ஆசிரியர்கள் அனைவரும் 18-5-75 அன்று மறைமலையடிகள் நூல் நிலையத்திற்கு வருகை தந்தனர். அனைவருக்கும் சை. சி. கழகம். திருக்குறள் டுரு, லாசரசு மொழிபெயர்ப்பு நூலை அன்பளிப்பாக அளித்தது.

செய்திகளும் குறிப்புகளும்

பெண்கள் ஆண்டு பெற்ற முப்பெருஞ் சிறப்புகள்

அனைத்துலகப் பெண்கள் ஆண்டு என்று கூறப்படுகின்ற இந்த ஆண்டில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க மூன்று நிகழ்ச்சிகள் உள.

சிதம்பரம் அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி மாணவி கீதா என்பவர் இவ்வாண்டுப் பள்ளி இறுதித் தேர்வில் 600 க்கு 559 மதிப் பெண்களைப் பெற்றுத் தமிழகத்திலேயே முதன்மை பெற்றுத் திகழ்வது முதன்மையாகக் குறிப்பிடவேண்டியதொரு சிறப்புச் செய்தியாகும்.

இங்ஙனமே கல்வித் துறையின் உச்ச நிலைப் பட்டப்படிப்பான ஐ. ஏ. எஸ். தேர்வில் முதன்மையாகத் தேர்வு பெற்றவர் கிரண் பதுரா என்னும் இந்தியப் பெண்மணியாவார். இந்தத் தேர்வு எழுதியவர்களின் மொத்தத் தொகை 14,048 ஆகும். இவர்களுள் தேர்வு பெற்றவர்கள் 25 பேரேயாகும். இந்த 25 பேரும் பெண்கள். இஃது இரண்டாவது சிறப்புச் செய்தியாகும்.

உலகின் மிக உயர்ந்த மலை இமயமலை. இதன் உச்சி எவரெஸ்ட் எனப்படும். இந்த எவரெஸ்ட் உச்சியை எட்டிப் பிடிக்கும் முயற்சி பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இவ்வாண்டு இம் முயற்சியில், சப்பான் நாட்டைச் சேர்ந்த 36 வயதுடைய ஜுங் கோடா டபய் என்னும் குடும்பப் பெண்ணொருத்தி வெற்றி பெற்றுள்ளார். கடந்த 17-5-75 இல் 29,000 அடி உயரமுள்ள எவரெஸ்ட் உச்சியை அடைந்தார்.

சில ஆண்டுகட்கு முன்னர் டென்சிங் என்ற இந்தியர் ஒருவர் இதே போல் எவரெஸ்ட்டு உச்சியை முதன் முதலாக எட்டிப் பிடித்த செய்தி யாவரும் அறிந்ததே. பெண்கள் ஆண்களுக்கு இளைத்தவர் அல்லர் என்பதை எடுத்துக்காட்டும் வண்ணம் இப் பெண்கள் ஆண்டில் பெண்ணொருத்தி இதில் வெற்றி கண்டிருப்பது மூன்றாவதாகக் குறிப்பிடத் தக்க சிறப்புச் செய்தியாகும்.

இனி ஆங்கிலம் பயிற்று மொழியாக இராது

"இந்தக் காலத்தில் இந்திய மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் கல்விப் பயிற்சி அளித்தால் அதனை ஏற்றுக்கொள்ளும் திறம் அவர்களுக்கு இல்லை. இனி ஆங்கிலத்துக்கும் இந்திக்குமிடையே போட்டி இராது. இந்திதான் பயிற்று மொழி என்ற நிலை உருவாகிவிட்டது."

என்று, டாக்டர் சியாம் சுந்தர்தாசின் பிறந்த நாளை யொட்டி 18-5-75 இல் புது தில்லியில் 'பயிற்று மொழி இந்தி" என்னும் பொருள் பற்றிப் பேசிய இந்திய நடுவண் அரசின் கல்வி அமைச்சர் திரு. நூருல் அசான் குறிப்பிட்டுள்ளார்.

அதே கூட்டத்தில் 17-5-75 இல் பேசிய குடியரசுத் தலைவர் திரு. பக்ருதீன் அலி அவர்கள் இந்திதான் தொடர்பு மொழியாக இருத்தற்கு ஏற்றது. அதனை விரைந்து தொடர்பு மொழியாக்க வேண்டும் என்று வற்புறுத்திப் பேசியுள்ளார். மற்றும் சில தலைவர்கள் இப்படியே பேசியுள்ளனர்.

உலகப் பொது மொழியாம் ஆங்கிலத்தை அகற்றிவிட்டு, இவ் விந்தியத் துணைக் கண்டத்தையே உலகமெனக் கருதிக்கொண்டு இந்தியை இணைப்பு மொழியாக்க நினைப்பது அறியாமை மட்டுமன்று, பிற இந்திய மொழிகளை அழிக்கும் முயற்சியும் ஆகும்.

தில்லிப் பல்கலைக் கழகம் ஆங்கிலத்தை அகற்றுகிறது

உலகம் விரைந்து முன்னேறிக் கொண்டுவரும் இந்நாளில் நம் இந்தியப் பேரரசு ஆங்கிலத்தை அகற்றிவிட்டு இந்தியை முன்னேறச் செய்யும் விந்தையானதொரு முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது!

மாணவர்கள் கல்லூரிகளில் இடம்பெற இனி ஆங்கிலம் அறிந்திருக்க வேண்டும் என்னும் கட்டாயம் இல்லையாம்! இது தில்லிப் பல்கலைக் கழகம் அண்மையில் செய்திருக்கும் முடிவு.

இந்த ஆண்டு பள்ளி இறுதித் தேர்வு எழுதிய மாணவர்களுள் 7000 பேர் ஆங்கிலத்தின் துணையை நாடவில்லையாம். எனவே, கல்லூரி நுழைவுக்கு ஆங்கிலம் தேவை இல்லை என்று தில்லிப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் தலைமையில் நிறுவப்பட்ட ஒரு குழு முடிவு செய்துள்ளது.

குவித்துக் கிடக்கும் புத்தகங்கள்!

"மைய இந்தி இயக்குநரகம், தேசிய புத்தக நிறுவனம், சாஹித்ய அகாடமி, லலித் கலா அகாடமி ஆகிய நான்கு நிலையங்களின் புத்தகக் கிடங்குகளில் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புடைய புத்தகங்கள் குவிந்து கிடக்கின்றன இக் கிடங்குகள் நான்கு கல்வி அமைச்சவையைச் சேர்ந்தவை. இப்படிப் புத்தகங்களைக் கிடங்குகளில் குவித்து வைத்திருக்கும் நிறுவனங்கள் அரசாங்க மானியத்தை வேறு பெற்றுக் கொண்டிருக்கின்றன." என்று 13—5—75இல் நாடாளுமன்றத்தில் பேசிய ஜனசங்க உறுப்பினர் வருந்திக் கூறினர்.

ஆவியுலகம் பற்றிய ஆராய்ச்சி

இறந்துபோன வரலாற்றுச் சிறப்புடைய தலைவர்களின் ஆவிகளுடன் தொடர்புகொள்ளுவது பற்றித் தாங்கள் நடத்திய ஆய்வுகளைப் பற்றிக் கலந்துரையாட, வரும் ஆகஸ்டுத் திங்களில் பொகாடா என்னுமிடத்தில் 3000 ஆவியுலக இயக்குநர்கள் ஒரு மாநாடு கூடப் போகிறார்கள் என்றும் இறந்தவர்களின் ஆவிகளுடன் வெனின்சுலா அறிவியலாராய்ச்சியாளர் பேச்சு நடத்தி அதை ஒலிப்பதிவு நாடாவில் பதிவு செய்துள்ளனர் என்றும் அவை இம் மாநாட்டில் வைக்கப்பெறும் என்றும் கூறப் படுகிறது.

காலஞ்சென்ற நீரோ மெசாலினு (ரோம் நாட்டு அரசர் கிளாடியசின் மனைவி) ஜுவான் பெரான், ஜான் கென்னடி, ராபர்ட் கென்னடி போன்றவர்களின் ஆவிகளுடன் தொடர்புகொள்ளவும் இம் மாநாட்டில் பல ஆவியுலக இயக்குநர்கள் முயற்சி செய்வர் எனக் கூறப்படுகிறது.

இதழாசிரியர் துறவு பூண்டார்

சென்னை 'தமிழ் முரசு' என்னும் நாளேட்டில் துணையாசிரியராகவும் இதழ் எழுத்தாளராகவும் (நிருபர்) இருந்த திரு. அருணகிரிநாதன் என்பவர், 27-5-75 இல், மதுரைத் திருஞானசம்பந்த சற்குருநாத தேசிக சுவாமிகளின் குருபூசையின்போது, மதுரை ஆதீனத்தின் இளவரசாக அமர்த்தப் பெற்றார். அவருக்குத் தீக்கையும் திருமுழுக்கும் செய்விக்கப் பெற்றன.

திரு. ஏ. பி. சி. வீரபாகு அவர்களின் மணிவிழா

தமிழ்நாடு முன்னாள் காங்கிரசுத் தலைவர் திரு. ஏ. பி. சி. வீரபாகு பிள்ளை அவர்களின் மணிவிழா 24-5-75 இல் சென்னைப் புரசை மீனாட்சி கலியாண மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. நடுவணரசு நிதி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் விழாவுக்குத் தலைமை தாங்கினார்கள். நடுவணரசு அமைச்சர்கள் டி. யே. பாய்., ரகுராமையா, ஆகியோரும், முன்னாள் தமிழக முதல்வர் திரு. எம். பக்தவத்சலம், திரு. கே. எஸ். இராமசாமி, டி. என். அனந்தநாயகி, எம். எல். ஏ., ஜி. பூவராகவன், எம். பி., டி. கோசல்ராம், ஜி. உமாபதி ஆகியோரும் வாழ்த்துரை வழங்கினர்.

திரு. வீரபாகு பிள்ளையவர்கள் நீடுழி வாழ எம்முடைய உளமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

பெங்களூர்த் தமிழ்ச் சங்கம் நடத்தும் ஓவியப் போட்டி

பெங்களூர்த் தமிழ்ச் சங்கம் தமிழ்மொழி, கலை, பண்பாடுகளை வளர்ப்பதோடு தமிழுக்கும் கன்னடத்துக்கும் உள்ள தொடர்பினையும் வளர்க்கும் குறிக்கோளுடன், அது பல்லாண்டுகளாக நடத்திவரும் போட்டிகளில் ஓவியப் போட்டியும் ஒன்றாகும். இவ்வாண்டு இப் போட்டியை அனைத்திந்திய அடிப்படையில் நடத்துவதெனச் சங்கம் முடிவு செய்துள்ளது. கன்னட இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு ஓவியங்கள் தீட்டப் பெறுதல் வேண்டும் என்றும் போட்டிக்கு நுழைவுக் கட்டணம் கிடையாது, சிறந்த ஓவியங்களுக்குத் தனித்தனி பரிசுகள் உண்டு என்றும் 31-7-75 க்குள் ஓவியங்களைப் பெங்களூர் தமிழ்ச் சங்கம், 23 1 அண்ணுசாமி முதலியார் சாலை, பெங்களூர் 560042 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும் என்றும் சங்கச் செயலாளர் அறிவிக்கிறார்.

ஐந்து அகவைப் பெண் திருநெல்வேலி மங்கையர்க்கரசியிடம் காணப்பெறும் தெய்வத் தன்மை

தெய்வச் சேக்கிழார் திருவாய்மலர்ந்தருளிய அறுபத்துமூன்று நாயன்மார் வரலாறுகளிலிருந்து நூற்றுக்கணக்கான திருப்பாடல்களை இசையோடு பாடி, வரலாற்றுச் சான்றுகளை எடுத்துக் கூறிப் பொருள் விளக்கஞ் செய்து வருகின்ற பெண்ணின் வியத்தகு செயலை 23-5-75 இந்து ஆங்கில நாள் இதழிற் கண்டு பெருமகிழ் வெய்துகின்றோம்.

பரபரப்பிலும் புத்தகம் படித்தல்

குசராத் சட்டமன்றத் தேர்தலின் பொருட்டுச் சுற்றுப் பயணம் செய்த காலத்தில் இந்திய முதலமைச்சர் மாண்புமிகு இந்திரா காந்தியார் பத்து நூல்களைப் படித்து முடித்தனராம். அவற்றில் மோதிலால் நேரு, வின்ட்டன் சர்ச்சில் வரலாறுகளும், திருமணமும் பணிசெய்யும் மகளிரும் ஆகிய நூல்களும் இடம் பெற்றனவாம். நூல்களைப் படித்ததோடு விரைந்து முடிவு செய்ய வேண்டிய கோப்புகளையும் பார்வையிட்டனராம். "கற்றது கைம்மண்ணளவு, கல்லாதது உலகளவு" என்ற அறிவுரைக்கு எடுத்துக் காட்டாக விளங்குபவர் இவர்.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர் : வ. சுப்பையா.

பதிவு எண் : M. 4899

அப்பர் அச்சகம், சென்னை - 1.